# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 புரட்டாதி 18 செவ்வாய்க்கிழமை (05-10-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:268


## நுவரெலியாவில் நேற்று பெரும் தேடுதல் வேட்டை

### 50 க்கும் மேற்பட்டோர் கைதாகி விசாரணை

கொழும்பு, ஒக். 5

நுவரெலியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது 50 தமிழ் இளைஞர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 6 மணிக்கு ஆரம்பமான தேடுதல் பிற்பகல் 3 மணிவரை தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் வடக்கு — கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும்—

இவர்கள் மீதான விசாரணைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்—

நுவரெலியாப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

மலையகத்தில் மேற்கொள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரப் பகுதியில் புலிகளின் பெயரில் சுவரொட்டி

வவுனியா, ஒக். 5

வவுனியா நகரப்பகுதியில் விடுதலைப் புலிகளின் பெயரில் சுவரொட்டிகள் பல நேற்றைய தினம் ஒட்டப்பட்டிருந்ததாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'விரைவில் வவுனியா நகரத்தில் புலிக்கொடி பறக்கும்' என்ற வாசகங்கள் உட்பட பல வாசகங்கள் அந்த சுவரொட்டிகளில் காணப்பட்டதாகவும்—

சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதை அறிந்த படையினர் நேற்றுக் காலை அவ்விடங்களுக்கு விரைந்து சென்று அவற்றை அகற்றிவிட்டனர் எனவும்—

கூறப்பட்டது.

இதனை அடுத்து வவுனியா நகரின் பல பகுதிகளிலும் படையினரின் சோதனை நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டிருந்தன. (ஐ-7)

# டாங்கியை தகர்த்த ஏவுகணையின் மீதிகள் வெளிநாட்டு சோதனைக்கு!

## ரகத்தைக் கண்டுபிடிக்க முயற்சி

கொழும்பு, ஒக்ரோபர் 5

கடந்த மாதம் 24 ஆம் திகதி பரந்தன் பகுதியில் படையினரின் யுத்த டாங்கி ஒன்றைத் தகர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் பயன்படுத்திய டாங்கி எதிர்ப்பு ஏவுகணையின் எச்சங்கள் மேலதிக பரிசோதனைகளுக்காக ஐரோப்பிய நாடு ஒன்றின் தலைநகருக்கு கடந்த வெள்ளியன்று அனுப்பப்பட்டன.

ஏவுகணையின் ரகம், அது தயாரிக்கப்பட்டஇடம், காலம்என்பனவற்றை உறுதிசெய்வதற்காகவே அதன் எச்சங்கள் வெளிநாட்டில் பரிசோதனை செய்யப்படுவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ரஷ்யத் தயாரிப்பான 'சக்கர்' (SAGGER) ரகத்தைச் சேர்ந்த ஏவுகணையைப் பயன்படுத்தியே விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தி இருக்க வேண்டும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் முதலில் சந்தேகம் வெளியிட்டிருந்தன.

ஏவுகணை வெடித்த இடத்தில் இருந்து செப்புக் கம்பிகள் உட்பட ஏவுகணையின் பாகங்கள் சில மீட்கப்பட்டிருந்தன.

'வயர்' தொடர்பு மூலம் வழிநடத்தப்படும் ஏவுகணையாக அது இருக்கலாம் என்ற சந்தேகம் படை வட்டாரங்களில் நிலவுகின்றது.

கிழக்கு ஆசிய நாடுகளில் இருந்து புலிகள் இந்த ஏவுகணைகளைப் பெற்றிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

இவற்றை உறுதிப்படுத்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலை செய்யுமாறு கோரி மன்னார் அரச அதிபர் மனு

கொழும்பு, ஒக் 5

கல்கிசை குற்றப் புலனாய்வுப் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் மன்னார் அரச அதிபர் எஸ். எம். குருஸ் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

காரணம் இன்றித் தடுத்து வைத்திருப்பதன் மூலம் தனது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் - அதிரடிப்படை முகாம் மீது பேசாலையில் புலிகள் தாக்குதல்

மன்னார், ஒக். 5

மன்னார் மாவட்டத்தில் பேசாலையில் முதலாம் வட்டாரத்தின் நுழைவாயிலில் அமைந்துள்ள பொலீஸ் மற்றும் விசேட அதிரடிப்படை முகாம் மீது நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

சுமார் 20 நிமிடங்கள் நீடித்த இந்தத் தாக்குதலில் இரண்டு பொலீஸார் காயம் அடைந்தனர்.

தாக்குதலைத் தொடர்ந்து பேசாலை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி படையினர் கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

பேசாலை முருகன் கோயில் குடியிருப்பு மீது ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகவும்—

வீடுகள் பல சேதமடைந்துள்ளன என்றும் —

உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து பேசாலை நகரைச் சுற்றிவளைத்து படையினர் காலை 6 மணி முதல் 10 மணி வரை தேடுதல்களை நடத்தினர். இந்தத் தேடுதல்களின்போது நூற்றுக்கு மேற்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### 'லங்கா முடித்த' வடக்கே புறப்பட்டது

திருகோணமலை, ஒக். 5

திருகோணமலையில் இருந்து ஆயிரத்து 30 பயணிகளுடன் 'லங்கா முடித்த' கப்பல் நேற்றுப் பிற்பகல் காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டதாக திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

விடுமுறையில் தமது

(10 ஆம்பக்கம் பார்க்க)

### படை முகாம் வாபஸ்

அளவெட்டி, ஒக். 5

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சந்தியில் — அலுமினியத் தொழிற்சாலை முன்பாக — நிலைகொண்டிருந்த படையினர் திடீரென அங்கிருந்து வாபஸ் பெறப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் போடப்பட்டிருந்த வீதித் தடைகள் அகற்றப்பட்டுள்ளன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விதவைப் பெண் மீது பாலியல் வல்லுறவு!

### வரணியில் சீருடையினர் அட்டகாசம்

தென்மராட்சி, ஒக். 5

நள்ளிரவு வேளையில் சீருடையில் வந்த மூன்று பேர் வீடு சோதனையிடப் போவதாகக் கூறி வீட்டில் உள்ளோரை வெளியே போகச் சொல்லிவிட்டுஅங்கிருந்த 35 வயதான—மூன்று பிள்ளைகளின் தாயாரை அருகில் உள்ள தென்னந்தோட்டத்திற்கு இழுத்துச் சென்று துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி மூவரும் மாறி மாறி பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை நள்ளிரவு வரணி வாழைத்தோட்டப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட இளம் விதவையான இப் பெண்ணை கொடிகாமம் பொலீஸார் மறுநாள் வியாழக்கிழமை காலை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

தனது தம்பியின் இரு கைகளையும் கட்டி முற்றத்தில்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## பொலனறுவ மாவட்ட எல்லையில் சுங்காவில் கிராமத்தில் பொலீஸார் மீது தாக்குதல்

கொழும்பு, ஒக். 5

பொலனறுவ மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்றான சுங்காவில் முஸ்லிம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு பொலீஸார்மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

கனரக ஆயுதங்கள் சகிதம் மேற்படி கிராமத்தினுள் புகுந்த ஆயுதபாணிகள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 7 பொலீஸார் காயமடைந்தனர் எனவும்—

பொலீஸாருக்கும் — ஆயுத

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பகுதியில் மீண்டும் பெரும் உணவுத் தட்டுப்பாடு

வவுனியா, ஒக். 5

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அரிசி, மா மற்றும் பால்மா வகைகள் ஆகியவற்றுக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் குடாநாட்டில் இருந்து இடம் பெயர்ந்து சென்று வன்னிப் பகுதியில் வசிப்பவர்களும், வன்னியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தனியார் கடைகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் முன்பாகப் பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருந்து பொருள்களைக் கொள்வனவு செய்து வருவதாகவும் கூறப்பட்டது. (ஐ-7)

### மாணவி வீடு திரும்பினார்

யாழ்ப்பாணம், ஒக். 5

கடந்த முதலாம் திகதி முதல் காணாமற்போனதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

புங்குடுதீவில் ஆசிரியராகவும் அதிபராகவும்
கடமையாற்றிய தீவகமகன்

## திரு த. தவராசா

அவர்கள் பதவி உயர்வு பெற்று தீவக வலயத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளராக நியமனம் பெற்றதையிட்டு அவரை மிகவும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/புங்குடுதீவு
ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம்

(69668

# தவறிவிட்டது

கே. கே. எஸ். இல் இருந்து வந்த பயணிகள் கப்பலில் ஆடைகள் உள்ளடங்கிய கறுப்புநிற Bag ஒன்று 1 ஆம் திகதி தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம்வழங்கப்படும்.

தொடர்பு: செல்வம்ஸ்
கே. கே எஸ். வீதி,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021-2642 (69642)

# விற்பனைக்கு

- ★ வெங்காயம் பொதி செய்யும் நெற்பாக்
- ★ வவுனியா வயர் பாக்
- ★ குளிர்சாதனப் பெட்டிக்குரிய யுனிற் $\frac{1}{2}$, $\frac{1}{3}$
- ★ ஓரியன் ரொபி வகைகள் ★ ஐஸ் கோன்
- ★ ஐஸ்பழ தயாரிப்புக்கான குச்சிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

## நாதன் களஞ்சியம்

213C ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T. P. / FAX ] 2916

[69651]

# SCIENCE COLLEGE

JAFFNA.

## 99 A/L Day Class

**PHYSICS**

திரு. T. சம்பந்தன்

ஆரம்பம்: 7 - 10 - 99 வியாழன்

செவ்வாய் / வியாழன் } காலை 7-00 — 8-00

(69654)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 17 — 09 — 1926

உதிர்வு 27 — 09 — 1997

## அமரர் சண்முகம் இராசலிங்கம்

(ஓய்வு பெற்ற சிரேஷ்ட கணக்காய்வாளர்)

**திதி: 1999 -- 10 -- 05**

பாசமிகு அப்பாவே!
குடும்பத்தின் ஒளி விளக்கே!
ஆறுதல் சொல்ல ஆரிருந்தென்ன?
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயரம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மகள்,
உறவினர்கள்.

காளி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(சி/9178)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

# வெள்ளிவிழா கருத்தரங்கு

காண்பாளராக
( Observers )
கலந்து கொள்வதற்கான

## விண்ணப்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெள்ளிவிழாக் கருத்தரங்கு இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் மருத்துவ பீடத்தில் சமுதாய மருத்துவத்துறைக் கருத்தரங்கு அறையில் நடைபெறும்போது பல்கலைக்கழகத்து ஆசிரியர் தவிர்ந்த அறிஞர்களும் கருத்தரங்கில் காண்பாளராக கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். கருத்தரங்கு அறையில் இடவசதியைப் பொறுத்தே இவர்கள் அனுமதிக்கப்படுவர். ஆதலால் ஆர்வமுள்ளவர்கள் கருத்தரங்குச் செயலாளருடன் 09-10-99 க்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

கருத்தரங்கு இரு நாள்கள் காலையிலும் நண்பகலுக்குப் பின்னரும் நடைபெறும். கருத்தரங்கில் கலந்துரையாடவுள்ள கட்டுரையாளர்களின் தலைப்பு, ஆசிரியர் விவரங்களைப் பெற விரும்புவோர் பேராசிரியர் நா. ஞானகுமாரன், செயலாளர், வெள்ளிவிழாக்கருத்தரங்கு அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்
(சி/9176)

# நாகம்ஸ்

சுன்னாகம்

சரத்குமார் – வினித்தா
சுகன்யா — கவுண்டமணி
நடித்த

## மகாபிரபு

காட்சிகள்: 11-00, 2-30
(புதிய நேரம்)
(சி/9180)

# ராஜா

யாழ்ப்பாணம்
ரஜனி - குஷ்பு
மற்றும் பலர் நடித்த

## பாண்டியன்

10-30, 2-30
8 ஆம் திகதி முதல்
ரோஜாவைக் கிள்ளாதே
(சி/9159)

# லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
பிரசாந், சிம்ரான்
நடித்த

## ஜோடி

[புதிய வெளியீடு]
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No. 070-212223
(69659]

# வகுப்பறை திறப்பு விழா

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட தரம் ஒன்றுக்கான வகுப்பறைத் திறப்பு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் தீவக வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்வரத்தினம், தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்க பொருளாளர் நா. கணேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி திரவியம் சதாசிவம்

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது புத்தளத்தில் வசித்தவரும் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியுமான திருமதி திரவியம் சதாசிவம் அவர்கள் 03 - 10 – 1999 ஞாயிற்றுக்கிழமையன்று புத்தளத்தில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:
ச. சிவகுமார் (மகன்)
திருமதி லலிதாம்பிகை (பபி) லோகாதரன் (மகள்)

'மாவிலங்கை''
'அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(69667)

## திருமதி பொன்னம்பலம் இரத்தினம்

மந்துவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பொன்னம்பலம்இரத்தினம் 04– 10–99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இளையபிள்ளையின் அன்பு மகளும் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர் ஆறுமுகம் பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5-10- 99) செவ்வாய்க்கிழமை பகல் 12 மணியளவில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இலுவன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செ. ஜெகதீசன் (கணேஸ்)
(சகோதரன்)

மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

(69675)

## தங்கத்துரை சத்தியகீர்த்தி

(கீர்த்தன)

சுப்பர்வளவு அல்வாய் கிழக்கு அல்வாயைச் சேர்ந்த தங்கத்துரை சத்தியகீர்த்தி 01-10-99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் க. தங்கத்துரை—பவளநாயகி தம்பதிகளின் அன்பு மகனும் தயாபரன் (திருகோணமலை), ரவிநாதன் (ஹொலண்ட்), சீவரத்தினம் (ஜேர்மனி), கலைமதி, வசந்தகுமாரி ஆகியோரின் அருமைச் சகோதரனும் மணிவண்ணன், தனேஸ்வரி, தியாங்கா ஆகியோரின் மைத்துனரும் தர்மினி, அருண் ஆகியோரின் மாமனும் ஸ்ரீபன், பிரையன் (ஹொலண்ட்) ஆகியோரின் சிறியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை [06-10-99] புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. கிருஷ்ணன்
(சகோதரன்)

சுப்பர்வளவு,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்

(சி/9186)

## திருமதி திரிபுரசுந்தரி அம்மாள் கைலாசநாதக் குருக்கள்

முன்னேஸ்வரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இங்கிலாந்தில் வசித்து வந்தவருமான திருமதி திரிபுரசுந்தரி அம்மாள் கைலாசநாதக் குருக்கள் 4-10-1999 திங்கட்கிழமை அதிகாலை நான்கு மணியளவில் லண்டனில் காலமானார்.

அன்னார் நல்லூர் கைலாசநாத சுவாமி தேவஸ்தானம் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களின் அன்பு மனைவியும் முன்னேஸ்வரம் சிவஸ்ரீ சி. சாம்பசிவக்குருக்களின் அருமை மகளும் பிரம்மஸ்ரீ ஸ்ரீதரன் (கனடா), ஸ்ரீமதி கௌரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீமதி கோமதி, பிரம்மஸ்ரீ விநாயகரட்ணசர்மா ஆகியோரின் அன்பு மாமியாரும் அனுத்தம்மா, கபிலன், ரமா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ப. சர்வேஸ்வரஐயர்

98, செட்டித்தெரு,
நல்லூர்.
C/O, Prof. R. SWAMINATHAN,
10, Medow Mead
Radlelt,
Herts WD7 8ES,
ENGLAND.
00441923859954.

(69653)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குத்திமோர் மக்கள் சொந்த இடங்களுக்குத்திரும்ப அனுமதி

ஜகார்த்தா, ஒக். 5

கிழக்குத் திமோரில் இடம் பெற்ற வன்முறைகளை அடுத்து அங்கிருந்து வெளி யேறி மேற்குத் திமோர் அகதிமுகாம்களில் தஞ்ச மடைந்திருந்த கிழக்குத் திமோர் மக்கள் அவர்களது சொந்த இடங்களுக்குத் திரும் பிச் செல்ல இந்தோனேசிய அரசு அனுமதி வழங்கி உள் ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற ஐ. நா. ஏற்பாட்டிலான சர்வ ஜன வாக்கெடுப்பில் சுதந் திரத்துக்கு ஆதரவாக கிழக் குத் திமோர் மக்கள் வாக் களித்திருந்தனர்.

இதனை அடுத்து இந்தோ னேசிய இராணுவத்தின் ஆத ரவு பெற்ற ஆயுதபாணிகள் கிழக்குத்திமோரில் வன்முறை களில் ஈடுபட ஆரம்பித்த னர்.

இந்த வன்முறைகளுக்குப் பயந்து சுமார் 2 லட்சம் மக் கள் மேற்குத் திமோருக்குத் தப்பியோடி அங்குள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந் திருந்தனர்.

இவர்களில் பெரும்பாலான வர்கள் கிழக்குத் திமோருக் குத் திரும்ப விரும்பவில்லை. இந்தோனேசியாவில் இருக்க விரும்புகின்றனர் என இந்தோ னேசிய அரசு இதுவரை தெரி வித்து வந்தது.

அமெரிக்காவின் நெருக்கு தல் காரணமாகவே தற் போது அகதிகள் தமது

**உலக அரங்கில்**

சொந்த இடங்களுக்குத் திரும்புவதை இந்தோனே சியா அனுமதித்துள்ளது என்று கூறப்படுகிறது.

அனுமதிஅளிக்கப்பட்டதை அடுத்து அகதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும் பத் தொடங்கி உள்ளனர்.

எனினும் எல்லையில் உள்ள இந்தோனேசியப் படைகள், அகதிகள் கிழக்குத் திமோருக் குள் நுழைய அனுமதி மறுத்து வருவதாகத் தரி விக்கப்படுகிறது. (இ-6)

## இந்திய முன்னாள் மத்திய அமைச்சர் காலமானார்

புதுடில்லி, ஒக். 5

இந்திய முன்னாள் மத்திய அமைச்சரும் அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினரு மானஆர். கே. குமார் நேற்று முன்தினம் சென்னையில் கால மானார்.

தனது 57 ஆவது வயதில் மாரடைப்புக் காரணமாக அவர் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வாஜ்பாய் தலைமையி லான அரசில் நிதி மற்றும் வருவாய்த் துறை துணை அமைச்சராக இவர் பணி யாற்றினார். எனினும் ஜெய லலிதாவின் உத்தரவின் பேரில் தனது பதவியை இராஜினாமாச் செய்தார் என்று கூறப்படுகிறது. [இ-6]

## கிழக்குத் திமோர் வன்முறைகள் தொடர்பாக ஐ. நா. விசாரணை நடத்தும்

நியூயோர்க், ஒக். 5

கிழக்குத் திமோரில் இடம் பெற்ற வன்முறைகள் குறித்து ஐ. நா விரைவில் விசாரணை நடத்தும் என அறி விக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசிய அரசின் ஆதரவு இருந்தாலும் இல்லா விட்டாலும் கிழக்குத்திமோர் வன்முறைகள் குறித்த விரிவான விசாரணைகள் உடனடியாக நடைபெறும் என ஐ. நா வெளி யிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக் குழு இன்னும் ஒரிரு வாரங்களில் இந்தோ னேசியா சென்று தனது பணிகளை ஆரம்பிக்கும் என கூறப் படுகிறது.

அபிப்பிராய வாக்கெடுப்பில் சுதந்திரத்துக்கு ஆதர வாக கிழக்குத் திமோர் மக்கள் வாக்களித்ததை அடுத்து அங்கு இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு இந்தோ னேசிய இராணுவம் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதில் ஐ. நா தீவிரமாக இருப்பதாக சொல்லப்படு கிறது.

ஐ. நா விசாரணைக் குழுவினர் சமர்ப்பிக்கும் அறிக்கை யின் அடிப்படையில் சர்வதேச யுத்தக் குற்றவியல் நீதிமன்றம் அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்றம் இந்தோனேசிய இராணுவம் மீது விசாரணை நடத்தும். (இ-6)

## அமெரிக்காவில் காந்திக்கு உருவச் சிலை

நியூயோர்க் ஒக். 5

அமெரிக்கத் தலைநகர் நியூயோர்க்கில் உள்ள ''சம் போக்'' என்ற இடத்தில் மகாத்மாகாந்தியின் புதிய உருவச் சிலை ஒன்று நிறு வப்பட்டுள்ளது.

காந்தியின் 130 ஆவது பிறந்த தினமான கடந்த சனிக்கிழமை இந்த உரு வச் சிலை திறந்து வைக் கப்பட்டது.

அமெரிக்காவின் புகழ் பெற்ற சிற்பியான அன் டானியோ டி. மென்டஸ் என்பவரால் மகாத்மா காந்தியின் சிலை செதுக் கப்பட்டுள்ளது. (இ-6)

## 6-வது அணுவெடிப்பு சோதனையை நடத்த இந்தியா தயாராக இருந்தது

### பாதுகாப்புச் செயலர் கூறுகிறார்

இந்தியா ஆறாவதாக ஓர் அணு வெடிப்புச் சோதனை நடத்துவதற்கான ஏற்பாடு களைச் செய்திருந்தது எனி னும் விஞ்ஞானிகளின் முடி வுப்படி இறுதி நேரத்தில் அது ரத்துச் செய்யப்பட் டது.

இந்திய பாதுகாப்புத் துறைச் செயலர் பிர்தேஷ் மிஷ்ரா இவ்வாறு தெரிவித் தார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியி லேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வருடம் மே மாதம் இந்தியா மேற்கொண்ட அணு வெடிப்புப் பரிசோத னைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அணு சக்தி வல்லமையை வலுப்படுத்த வேறு புதிய புள்ளி விவரங்கள் தேவை இல்லை என்று விஞ்ஞானி கள் மத்திய அரசிடம் தெரி வித்ததை அடுத்து 6 ஆவது அணு வெடிப்பு சோதனை ரத்துச் செய்யப்பட்டது என் றும் —

புதிய நாடாளுமன்றம் அமைக்கப்பட்டு நாட்டில் கருத்து ஒற்றுமை ஏற்பட்ட பின்னர் விரிவான அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியா தயார் என்றும் — பாதுகாப்புத்துறைச் செய லர் மேலும் சொன்னார்.

ஹொக்ரான் பாலைவனத் தில் கடந்த ஆண்டு மே மாதம் இரண்டு தடவை களில் இந்தியா ஐந்து அணு வெடிப்புச் சோதனைகளை நடத்தியதும் —

அதனைத் தொடர்ந்து பாகிஸ்தானும் அணு வெடிப் புச் சோதனைகளை நடத் [illegible] (இ-6)

## இரண்டாயிரமாம் ஆண்டு பிறக்கும்போது கிளின்ரன் உரை

வாஷிங்ரன், ஒக். 5

இரண்டாயிரமாம் ஆண்டு ஆரம்பமாகும் நேரத்தில் இடம்பெறும் கொண்டாட்டங்களின்போது அமெரிக்க ஜனாதி பதிபில் கிளின்ரன் முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்க னின் நினைவிடத்தில் இருந்து அமெரிக்க மக்களுக்கு உரை யாற்ற உள்ளார்.

1999 ஆம் ஆண்டின் இறுதி நிமிடம் முடிவடைந்து இரண்டாயிரமாம் ஆண்டு ஆரம்பிக்கும் கணத்தில் கிளின்ர னின் உரை ஆரம்பமாகும் என அவரது மனைவி ஹிலாரி தெரி வித்தார்.

இந்தக் கொண்டாட்டங்கள் சாதாரண நேரத்துக்கான சாதாரண விழா அல்ல. நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று சேர்வதற்கு உகந்த நேரமாகவும் நல்ல வாய்ப்பாகவும் இத னைக் கருதலாம் என்றும் ஹிலாரி மேலும் தெரிவித்தார்.

இரண்டாயிரமாம் ஆண்டை வரவேற்கும் கொண் டாட்டங்கள் நள்ளிரவு ஆரம்பமாகும். இதற்கான மின் விளக்கு அலங்காரங்கள் மிகப் பிரமாண்டமான முறையில் அமைக்கப்படும்,

அமெரிக்காவின் பிரபல நடிகர் 'வில் ஸ்மித்' விழாவில் முக்கிய நபராகக் கலந்து கொள்வார்.

பிரபல ஹொலிவூட் இயக்குநர் ஸ்டீவன் ஸ்பீல்ஸ் பேர்க் இயக்கிய திரைப்படம் ஒன்றும் [illegible] என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)


அரங்கச் செயற்பாட்டுக் குழு
நடத்தும்

## சிறுவர் நாடக விழா

**05 - 10 - 99**

மாலை 3. 00 மணி
யா/ இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

பிரதம விருந்தினர்:
Dr. N. சிவராசா
தலைவர்,
சமுதாய மருத்துவத்துறை
யா/ பல்கலைக்கழகம்.

சிறப்பு விருந்தினர்கள்:
குழந்தை M: சண்முகலிங்கம்
இயக்குநர்
நாடக அரங்கக் கல்லூரி
திருமதி பெனி புருன்
திட்ட உத்தியோகத்தர் யுனிசெப்

### மேடையேற்றப்படும் சிறுவர் நாடகங்கள்

- ''மின்னுவதெல்லாம் பொன்னல்லவே'' — யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை
- ''உம்மாண்டி விளையாட்டு'' — யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி
- ''பாறையும் சசியும்'' — திருக்குடும்ப கன்னியர் மடம் ஆரம்ப பாடசாலை யாழ்ப்பாணம்

சிறுவர் நாடக தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டி களில் வெற்றி பெற்றவர்களுக்கும், களப்பயிற்சியில் பங்கு பற்றியவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்ப பாடசாலை மாணவர்களையும், ஆசிரியர் களையும் எமது சிறுவர் தின நிகழ்ச்சியில் பங்குபற்றியவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரங்கச் செயற்பாட்டுக் குழு
THEATRE ACTION GROUP

அரங்கச் செயற்பாட்டுக் குழு
சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்திய
போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம்

### சிறுவர் நாடக எழுத்துருவாக்கப் போட்டி

முதலாம் இடம் – ருபா 2500
''தாத்தா சொன்ன கதை''
திரு. நாகலிங்கம் சிவசிதம்பரம்

இரண்டாம் இடம் – ருபா 1500
''மின்னுவதெல்லாம் பொன்னல்லவே''
செல்வி A. J. கணேசன்

முன்றாம் இடம் – ருபா 500
''சின்னவர்''
செல்வி ஜோர்ச் ஜெமல்டா

### தகுதிகாண் எழுத்துருக்கள் (சான்றிதழ்)

- ''கற்கை நன்று'' — திரு. இ அரசகுலசூரியர்
- ''கடவுளின் சிரிப்பு' — திரு. இ. இரவீந்திரன்
- ''தண்ணீர்த் தொட்டி'' — திரு. ப. கேதீஸ்
- ''நன்மையை உணர்ந்த நாம்பன்'' — செல்வி ஈ. கலைமதி
- ''அன்பு எங்கே'' — திரு. சு. சிவராசா
- ''ஒற்றுமை'' — திருமதி நா. ஆனந்தராணி

### சிறுவர் நாடகப் போட்டி

முதலாவது இடம் – ரு. 5,000
'மின்னுவதெல்லாம் பொன்னல்லவே'
யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டு.

இரண்டாம் இடம் – ரு. 3,000
'உம்மாண்டி விளையாட்டு'
அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி

முன்றாம் இடம் – ரு. 2,000
''பாறையும் கசியும்''
திருக்குடும்பக் கன்னியர் மடம்
ஆரம்பப் பாடசாலை, யாழ்ப்பாணம்.

### தகுதிகாண் நாடகங்கள

(பரிசுத் தொகை ரு. 1000.00)

- ''முயலார் முயல்கிறார்'' — ப. கேதீஸ், மல்லாகம்.
- ''பாறையும் கசியும்'' — திருப்பாலத்து சபை, கொய்யாத்தோட்டம்.
- ''ஒற்றுமையின் சின்னம்'' — நீர்வேலி வடக்கு, கிராம அபிவிருத்திச் சங்கம்.
- ''தாத்தா சொன்ன கதை'' — யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
- ''நட்பு'' — கொழும்புத்துறை இந்து ம. வி.
- ''குழந்தைகள் பாவனை செய்யும்'' — சைவப்பிரகாச வித்தியாலயம்.

பரிசில்களும் சான்றிதழ்களும் 05–10–99 இன்று நடைபெறும் நாடக விழாவில் வழங்கப்படும்

THEATRE ACTION GROUP - JAFFNA
அரங்கச் செயற்பாட்டுக் குழு யாழ்ப்பாணம்.
(சி/9177.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பழைய பொலீஸ் நிலைய ஒழுங்கை, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தம்பு நாகரத்தினம் என்பவருடைய விசேட அடையாள அட்டை [இல. 0905007631] மானிப்பாய் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கண்ணன் கடை, மூத்த விநாயகர் வீதி, ஆனைக்கோட்டை எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(69612)

தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் தயாபரன் என்பவரது விசேட அடையாள அட்டை [இல 0"01015201] தொல்புரத்துக்கும் சண்டிலிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கந்தவனம் ஸ்ரோர்ஸ், காளுவன் சந்தி, சுழிபுரம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(69613)

## கடை வாடகைக்கு

இல. 40, றக்கா றோட்டில் அமைந்துள்ள கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு: பாலா இல. 18, றக்கா றோட், யாழ்ப்பாணம். (I.C.R.C. சந்தியில்)

(69587)

## தில்லை சோதடம்

இந்தியாவில் கடலங்குடியில் சோதிடக் கலையைக் கற்றவரும் திரு. ஜி. பார்த்தசாரதியின் மாணவியுமான ஸ்ரீ அன்பு ஜெயவதனி என்பவரிடம் ஜாதகம் பார்த்தல், ஜாதகம் எழுதுதல், திருமணப் பொருத்தங்கள் பார்த்தல் போன்றவற்றை பார்த்து உங்கள் வாழ்வு நலம் பெற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அ. தில்லையம்பலம், (கரைப்பிட்டி விநாயகர் கோயில் அருகில்) அராலி தெற்கு, அராலி.

(69288)

## விற்பனைக்கு

3,4,5,6,8 அடி புதிய உடைந்த அஸ்பெஸ்றஸ் சீற் தேவையான தொகையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: கிருஷ்ணகுமார், விதானைவளவு, மானிப்பாய்.

(69515)

## மணமக்கள் தேவையா?

எம்மிடம் வெளிநாடு, உள்நாடு மணமக்கள் உண்டு. கடிதம் மூலமோ, நேரிலோ தொடர்பு கொள்ளலாம். முற்பணம் அறவிடப்படாது. தொடர்புகளுக்கு:- ப. முருகையா, காவலன் விவாகப் பொருத்துனர், மானிப்பாய் வீதி, உரும்பிராய்ச் சந்தி.

[69614]

## மணமகள் தேவை

15-8-70 பூராடம் (உயரம் '5 9'') (B. Sc. கணிதம் இலங்கை) கனடாவில் கொம்பியூட்டர் முடித்து வேலை செய்கின்றவருக்கு B. Sc. பட்டதாரி மணமகள் தேவை. இலங்கையில் வந்து திருமணம் செய்வார். தொடர்பு: காவலன் விவாகப் பொருத்துனர், மானிப்பாய் வீதி, உரும்பிராய்ச் சந்தி (69616)

11-5-67 ரோகினி கனடா வங்கியில் கணனி பொறியியலாளருக்கு அழகிய பட்டதாரி மணமகள் தேவை. (உயரம் 5 8'') தொடர்பு: காவலன் விவாகப் பொருத்துனர், மானிப்பாய் வீதி, உரும்பிராய்ச் சந்தி. (69615)

## தேவை

கோழிகள், ஆடுகள் பராமரிப்பதற்கு ஒருவர் தேவை. உடன் நேரில் வரவும். தொடர்புகளுக்கு: தனபாலசிங்கன், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (69632)

## யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் சிறுகதையின் பல லட்சணங்களையும் கொண்ட பத்துச் சிறுகதைகளும் ஒரு கட்டுரையும், II யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல், III யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள், IV நாடகம் எழுதுவது எப்படி? ரூபா 50. [69640]

# நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

# பதவி வெற்றிடம்

கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு 18 45 வயதுக்குட்பட்ட தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**1. எரிபொருள் நிரப்புனர் 313 / 16**

சம்பளம்:

2650—50X10—60X10—3750/-

தகைமைகள்:

(அ) கூட்டுறவுச்சங்க ஊழியர் 17ஆம் சம்பளத் திட்டத்தில் பதவியொன்றில் ஒரு வருடத்துக்குக் குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) 8 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழ்.

**2. எழுதுநர்— 302 : 15**

சம்பளம்:

2700—60X10—70X10—4000/-

தகைமைகள்:

(அ) கூ.ச ஊழியர் 16ஆம் சம்பளத்திட்டத்தில் எழுதுவினைஞர் பதவி ஒன்றில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) க.பொ.த. [சாதாரணதரம்] சான்றிதழ் கணிதம்/வர்த்தக எண் கணிதம்/ எண் கணிதம்/ மற்றும் சிங்களமொழி/தமிழ் மெ ழி உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்கள் சித்தி.

**3. விற்பனை முகாமையாளர்— 208 : 15**

சம்பளம்:

2700—60X10—70X10—4000

தகைமைகள்:

(அ) கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் 16ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்துக்குக் குறையாத அனுபவம்

அல்லது

கூட்டுறவுப் பணியாளரின் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 4 வருடத்துக்குக் குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் [சாதாரணதரம்] பத்திரம்/க.பொ.த. [சாதாரணதரத்தில்] 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம்/வர்த்தக எண் கணிதம்/தூயகணிதம், சிங்களம்/ தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கியதாக 6 பாடங்களிலான சித்தி, சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ விண்ணப்பப் படிவங்கள் காரியாலயத்தில் ரூபா 5 செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.

★ கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் பொதுமுகாமையாளர், நல்லூர் ப.நோ கூ. சங்கம், திருநெல்வேலி என்ற முகவரியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிக்கான பெயர் குறிப்பிட்டு 20—10—1999 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்களும் தகுதியற்ற விண்ணப்பங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

பொது முகாமையாளர்
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.

[சி/9158]

# விற்பனைக்கு

இரண்டு Technics - 300W டெக்செற், Technics-520W டெக்செற், Pioneer Box-CS305 Pioneer - Amplifier, Funai Deck - VIP3000

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

A. ஜெகா, பாடசாலை வீதி, தாவடி தெற்கு. அல்லது S. சந்திரன், சுதுமலை வீதி, தாவடி வடக்கு.

(69637)

# வாழ்த்துகின்றேன்

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியின் அதிபர்

**திரு. ந. பரமசிவம்**

(B.A. Dip- in - ED. S. L. P. S. - I) அவர்கள்

ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல பதவி உயர்வுகளைப் பெறவேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

இ. சாந்தன்
உதவிப் பணிப்பாளர்
(திட்டமிடல் ஆராய்ச்சி)
தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

(69641)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம்: 16 — 07 — 1915

மறைவு: 05 — 09 — 1999

**திருமதி பாறுவதி செல்லையா**

''பாசத்தின் பிறப்பிடமாய் அன்பின் அருளமுதாய்
பண்பின் சிகரமதாய் இன்பின் நல்ஊற்றாய்
இருந்து சென்றனள்''

நினைவலைகளில் மிதக்கும்
பிள்ளைகள், பேரமக்கள், மருமக்கள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(69560)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **வல்லிபுரம் அப்பாத்துரை**

[ஓய்வு பெற்ற உப அதிபர்]

தோற்றம் 11-09-1935

மறைவு 05-09-1999

திதி: ஆவணி அமரபக்க ஏகாதசி

பாசத்தின் உறைவிடமே எங்கள் அப்பா!
பண்பின் பிறப்பிடமே எங்கள் அப்பா!
நீங்கள் எமைப்பிரிந்து திங்கள் ஒன்றாகியதே
நீங்காத உங்கள் நினைவலைகள் ஓய்வதுண்டோ!

உங்கள் நினைவில்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன் மற்றும் உறவினர்கள்.

சத்தியவாசா,
லவ் லேன், உடுவில்.

[69633]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைக்குள்ளான இருவர் ரூபா ஒருலட்சம் நஷ்டஈடு கோரி மனு

## வைத்திய அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஒக். 5

வவுனியாவில் படைத்தரப்பினராலும், பொலீஸாராலும் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்ட சமயம் சித்திர வதைக்குள்ளானதாகத் தெரிவித்து அதற்காக நஷ்டஈடு பெற்றுத் தருமாறு கோரி வவுனியாவைச்சேர்ந்த இருவர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் படையினரால் கைது செய்யப்பட்ட தவலிங்கம் ரவிசங்கரும்—

கடந்த வருடம் நவம்பர் மாதம் வவுனியா பொலீஸாரால் கைது செய்யப்பட்ட துரைச்சாமி ஹரிச்சந்திரனும்—

சட்டத்தரணி டி. எஸ். சூசைதாசன், சட்டத்தரணி அருட்திரு வி யோகேஸ்வரன் ஆகியோர் மூலம் இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்,

தாம் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதால் தமக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு பெற்றுத் தருமாறும் அவர்கள் தமது மனுக்களில் கோரியுள்ளனர்.

இந்தமனுக்களைஆராய்ந்த உயர்நீதிமன்ற நீதிபரசர்களான கலாநிதி அமரசிங்க, பிரியந்த பெரேரா, வீரசேகர ஆகியோர் பிரஸ்தாப மனுக்களை விசாரணைக்கு ஏற்றதுடன், இருவரையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு சிறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டனர்.

இந்தமனுக்களைத் தாக்கல் செய்ய மனித உரிமைகள் இல்லம் என்ற அமைப்பு இலவச சட்ட உதவியை வழங்கியுள்ளது.

(இ-3-க)

## வடமராட்சிப் பகுதியில் விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு கொப்பிகள், பேனாக்கள் அன்பளிப்பு

கொழும்பு வலிபெல் லங்கா கப்பல் கம்பனி நிறுவனம், வடமராட்சிப் பகுதியில் விடுதிகளிலுள்ள மாணவர்களுக்கு உணவுப் பொருள்களையும் அப்பியாசக் கொப்பிகள், பேனாக்களையும் வழங்கி உள்ளது. அத்துடன் பருத்தித்துறை பங்குத் தந்தைக்கு 4 ஆயிரம் லீற்றர் கொள்கலன்களையும் அன்பளிப்புச் செய்துள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும், வலிபெல் லங்கா கப்பல் கம்பனிக்குச் சொந்தமான 'இன் துறுவ வலி' என்ற கப்பலிலேயே இப்பொருள்கள் இங்கு எடுத்து வரப்பட்டிருந்தன.

பொருள்களைக் கையளிக்கும் வைபவம் கடந்த புதன்று முற்பகல் 11 மணியளவில், பருத்தித்துறையிலுள்ள புனித மரியாள், புனித வளன் விடுதிமுன்றலில் பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு. பி. எம். இம்மனுவேல் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை 524 ஆவது பிரிகேட் பகுதியின் இரண்டாம் கட்டளை அதிகாரி மேஜர் மெண்டிஸ், மேஜர் டபிள்யூ. விக்ரமரட்ண, இன்துறுவ வலி கப்பல் கப்டன் றோஹாச், பிரதம அதிகாரி க. சோமசுந்தரம், இரண்டாவது பொறியியலாளர் ரீ. இசற்புவாசா, மூன்றாவது அதிகாரி ஈ. சீ. சில்வா, மூன்றாவது பொறியியலாளர் கமில பெர்ணாண்டோ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புனித வளன் விடுதியும், புனிதமரியாள் விடுதியும், பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு. பி. எம். இம்மனுவேல் அடிகளாரின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன.

இதேவேளை —

அடிகளாரிடம், 700 பைபிள் புத்தகங்களையும் 2 ஆயிரம் லீற்றர் கொள்ளக் கூடிய இரண்டு கொள்கலன்களையும் 'கப்பல் பிரதம அதிகாரி க. சோமசுந்தரம் கையளித்தார்.

(ஐ-109)


## யூரோமைன்ட்

அக்ரிவ் மல்ரி டிரைக்ஷனல்

அன்டனாவில் பூஸ்டர் பொருத்தப்பட்டுள்ளது



* அனைத்து அலைவரிசைகளிற்கும் ஒரே அன்டனா
* ஜேர்மன் தொழில்நுட்பம்

LANKA NIPPON

No. 18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place, (Behind Milk Bar), Bambalapitiya Junction,
Colombo 4. Tel: 589992

[சி/9173]


# போலி நாணயத் தாள்கள்

கொழும்பு, ஒக். 5

கணனிப் பயிற்சி நிலையம் என்ற பெயரில் இயங்கி வந்த நிலையம் ஒன்று போலி நாணயத் தாள்களை அச்சிட்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

நீர்கொழும்பு — சீதுவ பகுதியில் அமைந்திருந்த மேற்படி நிலையத்தில் இருந்து சுமார் 71 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆயிரம் ரூபா நாணயத் தாள்களையும், பத்துக்கு மேற்பட்ட கணனிகளையும் பொலீஸார் கைப்பற்றினர்.

மேற்படி நிலையத்தின் உரிமையாளர்கள் மூன்று பேரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(இ-7)

# குடிதண்ணீர்க் கிணறுகள் வலி. மேற்கில் புனரமைப்பு

மூளாய், ஒக். 5

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் உதவியுடன் பல குடிதண்ணீர்க் கிணறுகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

குடி தண்ணீருக்குப் பற்றாக்குறை ஏற்படுகின்ற பகுதிகளான சுழிபுரம், தொல்புரம், மூளாய், வட்டுக்கோட்டை, அராலி, சங்கானை போன்ற பகுதிகளிலேயே மேற்படிபுனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தூர்ந்து போயுள்ள நிலையில் காணப்படுகின்ற கிணறுகள் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுவருகின்றன.

(ஐ-99)

# நல்லூர் செயலர் பிரிவில் 61 குடும்பங்களுக்கு ரூ.5000

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 61 நிரந்தர குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

ஜே—106, ஜே — 110, ஜே —115, ஜே—118, ஜே—122 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் நிரந்தரமாக வசித்துவரும் 61 குடும்பங்களுக்கே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

உரியவர்கள் கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு கொடுப்பனவுகளை தத்தமது வங்கிகளில் நேற்றுத் திங்கட்கிழமை முதல் பெற்றுக் கொள்ள முடியும் எனப் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-180)

# வடமராட்சியில் இதுவரை 87 'கேபிள்' தொலைபேசிகள்

வடமராட்சி, ஒக். 5

வடமராட்சிப் பிரதேசத்தில் இதுவரை 87 கேபிள் லைன் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் அரச திணைக்களங்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தனியார் தொலைத் தொடர்புச் சேவைகள் அடங்கும்.

பருத்தித்துறை, நெல்லியடி மந்திகை ஆகிய பகுதிகளுக்குள்ளேயே 87 தொலைபேசி இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

(ஐ-173)

# வலி. வடக்குப் பகுதியில் இரு புதிய சந்தைகள்

வலி. வடக்குப் பகுதியில் இரண்டு இடங்களில் புதிதாகச் சந்தைகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கெனப் பிரதேசசபை காணிகளைக் கொள்வனவு செய்துள்ளது.

அளவெட்டி மலைவேம்படிப் பகுதியிலும், பன்னாலை கூத்தன்சீமா பகுதியிலும் இச் சந்தைகள் அமைக்கப்படும்.

அண்மையில் மக்கள் மீளக் குடியமர்ந்த இப் பகுதிகளில் நிரந்தர சந்தைகள் அமைக்கப்படுவது அப்பகுதி மக்களுக்கு நல்ல பயனளிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-27)


## சனீஸ்வர ஹோமம்

இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன் தேவஸ்தானத்தில் 09-10-99 சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் ந. ப. 12 மணி வரை சனீஸ்வர ஹோமம் நடைபெறும். அடியார்கள் அனைவரும் வந்து பங்கு பற்றி சனிதோஷத்தை நிவர்த்தி செய்வீர்களாக

சுபம்

சீ. பரமேஸ்வரன்

பிரதம குரு
தா. வாசுதேவக்குருக்கள்

(69630)



## வாழ்த்துகின்றோம்



சிறந்த சமூக சேவையாளரும் எமது நிறுவனத்தில் ஒரு வருடகாலம் முகாமையாளராகப் பணிபுரிந்தவரும் 17—09—99 இல் சமாதான நீதிவானாகப் பதவி ஏற்றிருப்பவருமான

### திரு. சண்முகம் ஏகாம்பரநாதன்

அவர்களை எமது நிறுவன உரிமையாளரும் ஊழியர்களும் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

### நியூற்றோன் எலக்றிக்கல்ஸ்

141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(69585)



வலி. கிழக்கு வட பகுதி பல நோ. கூ. சங்கம், அச்சுவேலி.

## கேள்வி அறிவித்தல்

1) வெற்றுச்சாக்குகள், வெற்றுப்பைகள் பல தரங்களில் உள்ளன.
2) இரு சக்கர உழவு இயந்திர கலப்பை புதியது — 01
3) இரு சக்கர உழவு இயந்திர கலப்பை பழையது — 01
4) பாவனைக்கு உகந்த தரத்தில் உள்ள மேடைத்தராசு 500 கிலோ — 7 (பெரியது மேடைத்தராசு)
5) ,, ,, ,, ,, ,, 250 கிலோ — 03 (பெரிய மேடை)
6) ,, ,, ,, ,, ,, 250 கிலோ — 02 (சிறிய மேடை)

மேற்படி பொருள்கள் எமது சங்கத்தில் விற்பனைக்கு உண்டு. தாங்கள் நேரில் வந்து எமது களஞ்சியத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிட்டு விலையைக் குறிப்பிட்டு எதிர்வரும் 10. 10. 1999 ஆம் திகதிக்கு முன்னர் கேள்விக் கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும்.

கேள்வி வைப்பாக ரூபா 250/- வைப்புச் செய்யவும்.

– பொது முகாமையாளர்.

வலி. கிழக்கு வடபகுதி ப. நோ. கூ, சங்கம்,
அச்சுவேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியையும்
முன்னாள் உப அதிபருமான
அமரர் V.N. ஐயாத்துரை
அவர்களின் துணைவியும்,
முன்னாள் ஆசிரியை திருமதி செ. ஜோதிமலர்
அவர்களின் தாயாருமான

திருமதி
**பரஞ்சோதி ஐயாத்துரை**

அவர்களின் மறைவுக்கு கல்லூரிச் சமூகம் தனது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகிறது.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபை,
பழைய மாணவர் சங்கம்.

**யாழ். டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.**

(சி/9155)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 – 04 – 1920 | 05 – 09 – 1999 |

அமரர்
**கந்தையா திருச்செல்வம்**

எங்கள் அருமை அப்பா!
எங்களை விட்டோடி மறையினும்
எங்கள் நினைவில் நிறைந்து இருக்கின்றீர்கள்
ஒரு மாதம் ஓடிடினும்
ஓராயிரம் மாதங்கள் ஓடிடினும்
உங்களை நினைந்து நினைந்து
நித்தம் கண்ணீரில் கரைகின்றோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் நன்றிகூறி இன்று நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனவிருந்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

முதலி கோயில் லேன்,
கொக்குவில் மேற்கு.

(69466)

## யோகர் சுவாமிகள் நினைவாக

கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் ஆயிலிய நட்சத்திர தின பூசை சுவாமிக்ளின் சமாதிக் கோயிலில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4–30 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் சுவாமிகளின் நற்சிந்தனை, பஜனை, கூட்டுப்பிரார்த்தனை ஆகியன இடம்பெறும்.

## சைவநெறித் தேர்வு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் வருடந்தே றும் நடத்தப்பட்டு வரும் சைவ நெறித் தேர்வு எதிர் வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ள மேற்படி தேர்வுக்கு சுமார் 50ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும்—

கடந்த வருடம் நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் சம்பந்தப்பட்டவர்களின் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் —சைவ பரிபாலன சபையின் பரீட்சைக் க ரியதரிசி சைவப் புலவர் வ. கந்தசாமி தெரிவித்தார். (இ–7)

## போக்குவரத்து ஊழியருக்கு கொடுப்பனவு

வடக்கு — கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் கடமையாற்றும் போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன என்று போக்குவரத்து அமைச்சர் ஏ. எச். எம். பௌசி தெரிவித்தார்.

கடந்த வருடத்துக்கான நிலுவைப் பணத்துடன் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும்—

முதற்கட்டக் கொடுப்பனவு இந்த மாத இறுதியிலும், இரண்டாவது கட்டக் கொடுப்பனவு அடுத்த மாத இறுதியிலும் வழங்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ–7)

# நினைவஞ்சலி

| 36 ஆம் ஆண்டு | 12 ஆம் ஆண்டு |
|---|---|
|  |  |
| அமரர் **வி. மார்க்கண்டு** (முன்னாள் தபாலதிபர்) | திருமதி **பத்மாவதி மார்க்கண்டு** |
| தோற்றம்: 03-04-1920 மறைவு: 21-03-1963 | தோற்றம்: 17-06-1927 மறைவு: 12-10-1987 |

உங்கள் பசுமையான நினைவுகளோடு தங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

மா. இராமலிங்கம்,
கப்பல் வளவு,
சுன்னாகம்.

(69605)

# விற்பனைக்கு

TATA லொறி செசி 1612
விற்பனைக்குண்டு.

தொடர்பு;
R. திருஞானசம்பந்தர்
பெரிய அரசடி,
சாவகச்சேரி.

(69504)

# தேவை

அனுபவமுள்ள கொம்பசிற்றர் தேவை
நேரில் சந்திக்கவும்.

திருமகள் அழுத்தகம்
சுன்னாகம்.

(69596)

# வாழ்த்துகின்றோம்

யாழ். மாவட்ட
சமாதான நீதிவானாக
நியமனம் பெற்ற மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சரசாலை வடக்கு ''திருவேரகத்தை'' வசிப்பிடமாகவும் கொண்டவருமான
ஓய்வுபெற்ற நில அளவையாளர் (R.M.C:)



**ஆ. ஜெயபாலன்**

அவர்கள் சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகரின் அருட்கடாட்சத்தினால் மக்களுக்குச் சிறந்த சேவை செய்ய வாழ்த்துகின்றோம்.

அம்பிகா டிஸ்பென்ஸரி,
சாவகச்சேரி.

(சி/9169)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருவாளர் மாணிக்கம் தங்கராசா**
(தங்கா)

கைதடி தெற்கில் செல்வம் விதானையார் வளவில் ஏழு விதானை பரம்பரையின் தொடராக உதித்த திருவாளர் மாணிக்கம் தங்கராசா [தங்கா] அவர்கள் 2—9—1999 ஆம் திகதி அன்று யாழ். மாவட்ட நீதிபதி உயர்திரு எஸ். ஏ ஈ. ஏகநாதன் அவர்கள் முன்னிலையில் யாழ் மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு நாம் பெரு மகிழ்வெய்துவதுடன் எங்கள் சபையின் பாராட்டுக்களையும் அவருக்குத் தெரிவிப்பதில் பெருமையடைகிறோம்.

சமய சமூகப் பணிகளில் அதிகளவு ஈடுபாடு கொண்ட இவர் கைதடி அத்திலம்புலம் கந்தசுவாமி கோவில் பரம்பரை அறங்காவலரும் எமது பரிபாலன சபை உறுப்பினரும் கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் முதலாய கோவில்களின் மஹோற்சவ எட்டாம் உபய அங்கத்தவரும், அங்கு கோயில் கொண்டருளியிருக்கும் சிவனின் மஹோற்சவ தேர்த் திருவிழா உபயகாரருமாவார்.

இவரும், இவரின் சமய சமூகப் பணிகளுக்கு ஒத்தாசையாகவும் உறுதுணையாகவும் விளங்கும் இவரின் பாரியார் நாகேந்திரராணி பிரதிப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம் அவர்களும் நலமுடன் நீடூழி வாழவும் அவர்களின் பணிகள் தொடர்ந்து சிறந்து விளங்கவும் கைதடி வீரகத்திப் பிள்ளையாரின் திருவருள் கைகூடுவதாக.

**கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோயில்களின் பரிபாலன சபை.**

(69628)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மூவகைத் திருத்தம் தேவை

நாளை ஒக்ரோபர் ஆறாம் நாள் அனைத்துலக ஆசிரியர் தினமாகும். ஆசிரியர் தொழிலை மகிமைப்படுத்தும் பொருட்டு மாணவர்கள் மற்றும் மக்களிடம் விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும் முகமாக இந்த நாள் அனைத்துலக ரீதியாக, ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எங்கள் பிரதேசங்களிலும் கடந்த சில வருடங்களாக ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அதற்கெனப் பாடசாலைகளில் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டு மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் ஆசிரியர்களைப் பாராட்டி மதிப்பளிக்கிறார்கள்.

எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்ற உயர் நிலையில் வைத்து ஆசிரியர்களுக்கு மதிப்பளித்த பாரம்பரியம் எமது மக்களுக்கும் மண்ணுக்கும் உண்டு. மாதா, பிதா, குரு தெய்வம்எனப் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் போற்றி வணங்கிய பண்பாடு ஒரு காலத்தில் இந்த மண்ணில் மேலெழுந்து நின்றது.

அறிவொளி தரும் ஆசான், ஒரு மாணவனின், இளைஞனின் வாழ்க்கை வழி காட்டியாகக் கருதப்பட்டு அவனுக்கு மதிப்பளிக்கப்பட்டது அவனிடம் அடக்கத்துடனும் பணிவுடனும் மாணவன் நடந்துகொண்டான்

ஆனால் இன்று அந்த நிலைமை இல்லை. எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. மாணவர்கள் எவ்வாறு மாறிக் கொண்டார்களோ, அதே போன்று ஆசிரியர்களும் மாறிக் கொண்டார்கள். ஆசிரியருக்கு மதிப்பளிக்காத மாணவர்களின் எண்ணிக்கை எவ்வாறு பெரும்பான்மையாகி விட்டதோ அவ்வாறே அர்ப்பணிப்பும், மாணவர் நலனைப் பேணுதலும் இல்லாத ஆசிரியர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

மாணவர்களும் ஆசிரியர்களும் மட்டுமன்றி கல்வியின் பெறுமதியும் மாற்றப்பட்டு விட்டது. அதாவது அறிவூட்டும் சாதனமாக விளங்கிய கல்வி, இப்போது வர்த்தக மயப்படுத்தப்பட்டு விட்டது. எல்லாத் தானங்களிலும் தலை சிறந்த தானமாக மதிக்கப்பட்டுப் போதிக்கப்பட்ட கல்வி, இப்போது காசுக்கு கைமாறும் பொருளாகி விட்டது

ஆகையால் மாணவர்கள் திருந்த வேண்டும்; ஆசிரியர்கள் முந்திய பரம்பரை ஆசிரியர் போன்று அர்ப்பணிப்பும் மாணவர் நலன் பேணுதலும் உள்ள ஆசான்களாக மாற வேண்டும்; கல்வி அறிவுப் பொருளாக மாற்றப்பட வேண்டும்.

அனைத்துலக ஆசிரியர் நாள் ஆசிரியர்களுக்கு உள்ள உரிமைகளை மட்டுமன்றிக் கடமைகளையும், அவர்களுக்குள்ள சமூகப் பொறுப்புகளையும் நினைவூட்டிச் செயற்படுத்தும் நாளாக அமைவது சிறப்புடையது.

தமது எதிர்காலத்தின் வழிகாட்டிகள் ஆசிரியர்கள் என்பதை உணர்ந்து, அவர்களுக்கு மதிப்புக் கொடுக்கவும் பணிவுடன் நடக்கவும் மாணவர்கள் பயில்வது அவசியம். வாழ்வு சிறக்கக் கல்வியோடு ஒழுக்கமும் அவசியம்.

எண்ணும் எழுத்தும் கண்கள் என்றால் அவற்றை உங்களுக்கு ஊட்டும் ஆசிரியர்கள் ஒளி தரும் கடவுளர் அல்லவா? அவர்களை மதிக்கவும் கௌரவிக்கவும் பழகுங்கள்; மாணவர்களே!

ஆசிரியர் — மாணவர் நல்லுறவும் நெருக்கமும் வளர ஆசிரியர் நாள் ஊக்கியாக அமையட்டும். இதனை ஓர் எழுச்சி விழாவாக்கி மேற் சொன்ன மூன்று வகைத் திருத்தங்களை அந்தந்தத் தரப்பார் செயலாக்கினால் விளைவு நல்லதாகும். இந்த விழாவுக்கு சமூகமும் உணர்வுடன் ஊக்கத்துடன் முழுத் துணையாக இருக்க வேண்டும்.

# சர்வதேச அழுத்தங்கள் மூலமே இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு

''தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு, நாட்டில் சமாதான சூழ்நிலை ஆகியன உள்நாட்டில் இருந்து வரப்போவதில்லை. சர்வதேச அழுத்தங்களின் மூலம் தான் அவற்றை எட்டமுடியும்''

இதுவே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்கிறார் யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம்.


கடந்த மாதத்தில்இரு தடவைகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றிருந்த சமயம் விடுதலைப்புலிகளின் தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போது அவர்கள் இந்தநிலைப்பாட்டை வெளியிட்டனர் என்று ஆயர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடல்கள் குறித்து ஆயர் உதயனுக்கு செவ்வி வழங்கினார்.

செவ்வி வருமாறு:-

கேள்வி:- விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடல்களில் நீங்கள் உணர்ந்த விடயங்கள் பற்றி கூறுவீர்களா?

பதில்:- கடந்த மாதம் முதலாம் திகதி முதல் எட்டாம் திகதி வரை அங்கு தங்கியிருந்த சமயம் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் துறைத் தலைவர்களுடன் பேசினேன். அதன் பின்னர் கொழும்பு திரும்பி ஆயர் மாநாட்டில் கலந்து கொண்டேன். ஆயர் மாநாட்டில்



யாழ். ஆயர்

கலந்து கொள்ள வந்திருந்த மன்னார், மட்டக்களப்பு மறை மாவட்டங்களின் ஆயர்களும புலிகளின் பிரதேசத்துக்குச் செல்ல விரும்பினர்.

அதனால் அவர்களுடன் 20 ஆம் திகதி மீண்டும் அங்கு சென்றேன். அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப தமிழ்ச் செல்வன், உதவி அரசியல் பொறுப்பாளர் எஸ். கரிகாலன், அரசியல் துறையைச் சேர்ந்த எஸ். சுதா ஆகியோருடன் கலந்துரையாடினோம்.

''ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் மூன்றாம் தரப்பு ஒன்றுடன் பேச்சு நடத்த நாம் தயார்'' என கடந்த வருட மாவீரர் வார உரையில் எமது தலைவர் வே. பிரபாகரன் அறிவித்திருந்தார். ஒவ்வொரு வருடமும் வரும் மாவீரர் தினத்தில் எமது நிலைப்பாட்டை எமது தலைவர் தமது உரையில் வெளியிடுவது வழக்கம்.

''இந்த வகையில் பேச்சுக்கான சமிக்ஞையை நாம் வெளியிட்டு ஒரு வருடமாகின்றது. அரசிடம் இருந்து இது வரை எந்தவித சமிக்ஞையும்

தலைவரின் சிந்தனை தமிழ், மக்களின் பிரச்சினைக்காக அவர் கொண்டுள்ள நிலைப்பாடு ஆகியவற்றை சர்வதேச சமூகத்துக்கு விளக்குவதற்காக அவரின் பிரதிநிதியாக எமது அமைப்பின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வெளிநாட்டுக்கு அனுப்பப் பட்டுள்ளார்.

''அன்ரன் பாலசிங்கம்

> வன்னியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கடந்த மாதம் இரு தடவைகள் விஜயம் மேற்கொண்ட யாழ்ப்பாணம் — வன்னி மறைமாவட்ட ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம் அங்குள்ள நிலைமை குறித்து தெரிவித்த கருத்துக்கள் கடந்த முதலாம் திகதி பிரசுரமாகி இருந்தன.
>
> அங்கு விடுதலைப்புலிகள் தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடல் தொடர்பாக அவர் வெளியிட்ட தகவல்கள் இன்று பிரசுரமாகின்றன.

வெளியாகவில்லை.

''எம்மைச் சந்திக்க வரும் சமாதானக் குழுக்களிடமும் தலைவரின் இந்த விருப்பத்தை நாம் தெளிவுபடுத்தியிருந்தோம்.

''இன்றும் நாம் அந்த நிலைப்பாட்டிலேயே இருக்கிறோம். அதில் எந்தவித மாற்றமும் இல்லை. இன்றும்கூட அரசாங்கம் எம்முடன் பேச்சுக்கு வரலாம்.

ஆனால் அரசாங்கம் எம்முடன் பேச்சு நடத்த விரும்பாத விதத்தில் செயற்படுகின்றது. எவ்வாறு எம்மை ஒழித்துக் கட்டலாம் என்று கங்கணம் கட்டி நிற்கின்றது.

''எமக்கு எதிராகப் பெரும் யுத்தம் ஒன்றை நடத்த நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் அதிக அக்கறை காட்டுகின்றது.

''அமெரிக்காவில் எமது அமைப்பைத் தடை செய்வித்தது போன்று ஏனைய நாடுகளிலும் எமது அமைப்பைத் தடை செய்விக்க அரசு முனைந்து செயற்பட்டு வருகின்றது.

''இந்த அணுகுமுறைகளை நோக்கும் போது அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தமிழ்மக்கள் விரும்பும் அவர்களது அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வைத் தர விரும்பவில்லை என்பதையே காட்டுகின்றது.

அங்கு மேற்கொள்ளும் செயற்பாடுகளின் பலாபலன்கள், அவற்றின் முன்னேற்றம் ஆகியன தொடர்பாக அவ்வப்போது எமக்கு அறியத்தருகின்றார். அங்கு அவர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக எமது தலைவர் அறிவுறுத்தல்களை விடுத்து வருகின்றார்.

''எமது போராட்டத்துக்கு, தமிழ் மக்களின் விருப்பத்துக்கு ஏற்ற தீர்வுக்கு சாதகமான சூழ்நிலை உருவாகி வருவதாக அவர் எமக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

''சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தின் மூலம் எமது பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். 3 ஆம் தரப்பு ஒன்றின் அனுசரணையுடன் அரசு பேச்சுக்கள் ஆரம்பிக்கும்என்று நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்'' என்று தமிழ்ச் செல்வன்குறிப்பிட்டார்.

### 3 ஆம் தரப்பு மத்தியஸ்தம்

கேள்வி:- விடுதலைப் புலிகள் தலைவர்களிடம் நீங்கள் என்ன கேட்டீர்கள்?

பதில்:- 3 ஆம் தரப்பு மத்தியஸ்தம் மூலம் பேச்சுக்குத் தயாரென நீங்கள் கூறுகிறீர்கள்? பேச்சுக்களை நடத்த நீங்கள் தலைமை ஒன்றை உருவாக்கவில்லையே யாருடன் பேசுவது? என்று அவர்களிடம் கேள்வி எழுப்பி

அந்த நகர்வுகளைத் தடுக்கும் வகையில் நாம் பலமாகவே உள்ளோம். ஸ்ரீலங்காப் படையினரின் பலத்துக்குச் சமமான பலம் எம்மிடம் உண்டு. சகல பிரிவுகளிலும் ஸ்ரீலங்காப் படைகளை எதிர்க்கக் கூடிய வகையில் நாம் பரிணமித்துள்ளோம்.

''எமது சகல பிரிவுகளிலும் எமது வீரர்கள் தயார் நிலையில் மனோபலத்துடன் நின்று போராடுகின்றனர்.


**செவ்விகண்டவர்:**
**மாவை குகன்**

''விமான மற்றும் ஷெல் தாக்குதல்கள் காரணமாகவும், படைநகர்வுகள் காரணமாகவும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் நிலைமைதான் பெரு மோசம்'' என்றனர் அவர்கள்.

### பிரபாவைச் சந்திக்க முயற்சிக்கவில்லை

கேள்வி: விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திக்க முயற்சி எடுக்கவில்லையா?

பதில்: பிரபாகரனைச் சந்திக்க நாம் முயற்சிக்கவில்லை. அவரது பாதுகாப்பு முக்கியமானது. அவர் எம்மைச் சந்திக்க விரும்புவதாக அரசியல் துறையினர் தெரிவிக்கவில்லை பிரபாகரனின் நிலைப்



சு. ப. தமிழ்ச்செல்வன்

பாட்டை அரசியல் துறையினர் எமக்கு விளக்கி விட்டார்கள். அதன் காரணமாக அவரைச் சந்திக்க வேண்டிய தேவையும் ஏற்படவில்லை.

# இதுதான் தமது நிலைப்பாடு என்று யாழ். ஆயரிடம் புலிகள் தெரிவிப்பு

''இதன் காரணமாகவே நாம் சர்வதேச அழுத்தங்களை ஸ்ரீலங்கா அரசுக்கு பிரயோகிக்க முடிவு செய்துள்ளோம்'', இப்படி அவர்கள் தமது நிலைப்பாட்டை விளக்கிக் கூறினர்.

### சர்வதேச அழுத்தம்

கேள்வி: சர்வதேசஅழுத்தங்களைஎப்படிக் கொண்டு வர முடியும் என்பதுகுறித்துஉங்களிடம்ஏதாவது விவரங்களை அவர்கள் கூறினார்களா?

பதில்:- ''சமாதான சூழ்நிலை, எமது மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய தீர்வு ஆகியன உள்நாட்டில் இருந்து வரும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை.

''இதன்காரணமாக எமது

> **உதயவாக்கு**
>
> பயம் என்பது அறியாமையாலும் சலன புத்தியாலும் ஏற்படுகின்றது.
>
> — இராபின்சன்

னோம்.

''யுத்த அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் நாம் மறைந்து வாழவேண்டிய நிலையில் தான் இருக்கிறோம். எமது பாதுகாப்பு எமக்கு முக்கியம்.

''எமது பிரச்சினைக்குத் தீர்வுகாண 3 ஆம் தரப்பு ஒன்று முன்வந்து, எம்மாலும், அரசாங்கத்தாலும் ஏற்கப்படும் சமயத்தில் எமது பாதுகாப்பு விடயம் குறித்து ஆராயலாம்.

''அந்த 3 ஆம் தரப்பின் ஏற்பாட்டில் எமக்குப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் பெறப்பட்டு எமது தலைமை பேச்சுக்களில் ஈடுபடும் என்று பதில் கூறினார் தமிழ்ச்செல்வன்.

கேள்வி: யுத்த முஸ்தீபு மற்றும் மக்களின் இடம்பெயர்வு போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடினீர்களா?

பதில்: ஸ்ரீலங்காப் படையினர் திடீர் திடீரென நகர்வுகளை மேற்கொள்கின்றனர்.

### போர்க் கைதிகள் விவகாரம்

கேள்வி: வேறுஎன்னென்ன விடயங்கள் பற்றி நீங்கள் பிரஸ்தாபித்தீர்கள்?

பதில்: விடுதலைப் புலிகள் வசம் உள்ள போர்க் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும், போர் வரை விலக்கணங்களுக்கு இணங்க பொதுமக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் செயற்பட வேண்டும் என்றும் நாம் அவர்களிடம் கோரினோம்.

''எம்மிடம் 15 போர்க் கைதிகளே உள்ளனர். அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். எமது தமிழ் இளைஞர்களை வகை தொகையின்றிக் கைது செய்து சித்திரவதை செய்து, சிறைகளில் அடைத்து வைத்திருக்கும் அரசின் செயல் போன்று நாம் எந்தக் கைதிகளையும் நடத்தவில்லை. அவர்களை மனிதாபிமான முறையில் பராமரித்து வருகிறோம்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை**

புரட்டாதி 19

புதன்கிழமை

திதி: துவாதசி மாலை 5.35 வரை.

நட்சத்திரம்: மகம் மாலை 6.59 வரை.

பிரதோஷ விரதம்

ஜயநேரம்: 4.32—6.02

ராகுகாலம்: 12.02—1.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ்.குடா நாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு விமானம் மூலம் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவுஇலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:—

சாவகச்சேரி

(117768ஏ), (117770ஏ),
(117770பி), (117773ஏ).
(119484ஏ), (119484பி),
(119484சி), (119491ஏ),
(119491பி), (119492ஏ),
(119492பி), (119495ஏ)'
(119495பி), (119501ஏ),
(119508ஏ), (119508பி),
(119508சி), (119513ஏ),
(119516ஏ), (120979ஏ.)
(120979பி), (116438ஏ),
(116445ஏ).
[116453ஏ], [116453பி[,
[116453சி], [116453டி],
[116453ஈ], [092334ஏ],
[092334பி], [094927ஏ],
[094927பி], [095105ஏ],
[096808ஏ], [096808பி],
[096808சி], [096808டி],
[105682ஏ].
(105682பி), (105700ஏ).
(105700பி), (108456ஏ),
(108470ஏ), (108470பி),
(108470சி), (108537ஏ),
(110629ஏ), (110629பி),
(114445ஏ), (114483சி),
(114483டி), [114490ஏ],
[114490பி], [114495ஏ],
[114526ஏ].
(114526பி), (114526சி)
(115005ஏ), (115005பி)
(115580ஏ), (115580பி)
(115580சி). (115581ஏ)
(115581பி), (115596ஏ),
(115605ஏ), (115605பி),
(115628ஏ).
(115629ஏ), (115629பி),
(115636ஏ), (115636பி),
(115645ஏ), (115656ஏ),
(115666ஏ), (115670ஏ),
(115673ஏ), (115681ஏ),
(115681பி), (115681சி),
(115697ஏ).
(115703ஏ), (115703பி),
(115725ஏ), (115725பி),
(115728ஏ), (115730ஏ),
(115733ஏ), (115733பி),
(115735ஏ), (115735பி),
(115735சி), (115735டி),
(115735ஈ), (115735 எவ்),
(115735ஜி).
(115741ஏ), (115741பி),
(115741சி), (115747ஏ),
(115747பி), (115747சி),
(115753ஏ), (115753பி),
(115753சி), (115753டி),
(115756ஏ), (115756பி),
(115757ஏ), (115757பி),
(115757சி),
[115772ஏ], [115773ஏ],
[115773பி], [115773சி],
[115774ஏ], [118480ஏ],
[118481ஏ], [118484ஏ],
[118486ஏ], [118488ஏ],
[118489ஏ], [118493ஏ],
[118493பி],
(118493சி), (118493டி),
(118493ஈ). (118493எவ்),
(118495ஏ), (118495பி),
(118504ஏ), (118504பி),
(118512ஏ), (118512பி),
(118518ஏ), (118526ஏ),
(118526பி), (118526சி),
(118533ஏ), (118546ஏ),
(118546பி), (118546சி).
(118565ஏ), (118565பி),
(118567ஏ), (118569ஏ),
(118569பி), [118599ஏ),
(118599 பி), [118619ஏ],
[118619பி], (118627ஏ),
(118634ஏ), (118636ஏ),
[118648ஏ], (120786ஏ),
(120786பி), [120786சி],
(120794ஏ), (120794பி),
[120794சி], [107854ஏ],
[112236ஏ], [114342ஏ].
(114358ஏ), [114358 பி[,
(114372ஏ), [117731ஏ],
[117739ஏ], [117749ஏ],
(117758 ஏ), (117759ஏ),
(119479 ஏ), (119519ஏ),

யாழ்ப்பாணம்

(110451 ஏ), (117702ஏ),
(102570 ஏ), 102570 பி),
(104854 ஏ), (104859 ஏ),
(109299 ஏ), (109299 பி),
(109590 ஏ), (112693 ஏ),
(112693 பி), (113892 ஏ),
(114061 ஏ),
(114199 ஏ), (114199 பி),
(115930 ஏ), (115930பி),
(116001 ஏ), (116001 பி),
(116001 சி), [116047 ஏ],
[116060 ஏ[, [116060 பி],
[1 16060 சி], [116087 ஏ],
[116087 பி], [116108 ஏ],
[116108 பி].
[117174ஏ], [117780ஏ],
[116780பி], [117833ஏ],
[117833பி], [117833சி],
[117833டி], [117838ஏ[,
[117852ஏ[, [117852பி],
[117852சி], [117875ஏ],
[117875பி], [117896ஏ]],
[117957ஏ], [117957பி[,
[117957சி], [117957டி],
[117979ஏ[, [118000ஏ],
[118000பி], [118002ஏ[,
[118002பி]
[118004ஏ], [118006ஏ],
[118027ஏ[, [118034ஏ],
[118047ஏ], [118047பி],
[1180064ஏ[, [118064பி],
[118078ஏ], [118078பி],
[118078சி], [118085ஏ],
[118087ஏ], [118088ஏ],
[118092ஏ], [118092பி],
[117097ஏ]
(118140ஏ), (118140பி),
(118140சி), (118140டி),
(118140ஈ), (118140எவ்),
(118147ஏ), (118147பி),
(118155ஏ), (118155பி),
(118155சி), (118155டி),
(118161ஏ), (118161பி),
(115172ஏ), (118180ஏ),
(118180பி), (118181ஏ),
(118181பி),
[118184ஏ], [118186ஏ],
[118186பி], [118186சி],
[118194ஏ], [118194பி],
[118201ஏ], [118201பி],
[118219ஏ], [111219பி],
[118226ஏ], [118226பி],
[118227ஏ], [118227பி],
[118229ஏ], [118229பி],
(118299சி), (118231ஏ),
(118232ஏ), (118235ஏ),
(118235பி), (118235சி),
(118249ஏ), (118249பி),
(118252ஏ), (118255ஏ),
(118256ஏ), (118256பி),
(118256சி), (118262ஏ),
(118262பி), (118269ஏ),
(118269பி).
(118269சி), (118269டி),
(119692ஏ), (119707ஏ),
(119708ஏ), (119738ஏ),
(119738பி), (119741ஏ,
(119743ஏ), (119751ஏ),
(119752ஏ), (119755ஏ),
(119755பி), (119755சி),
[119769ஏ], (119772ஏ .
[119775ஏ), [119775பி].
]119775சி], [119775டி],
( 119775ஈ), (120278ஏ),
(120291ஏ), (120294ஏ),
(120300ஏ), (120300பி),
(120301ஏ), (120310ஏ),
(120310பி), (120311ஏ),
[120312ஏ], 120312பி]
[120313ஏ], [120313பி],
[120318ஏ]. [120318பி],
[120318சி,] [120330ஏ],
[120331ஏ), [120338ஏ],
[120352ஏ], [120356ஏ],
[120363ஏ], [120366ஏ],
[120367ஏ], [120373ஏ],
[120373பி], [120382ஏ],
[120386ஏ], [120387ஏ],
[120387பி], [120390ஏ],
[120396ஏ].
(120396 பி), (120399ஏ),
(120402 ஏ), (120403 ஏ),
(120403 பி), (120406 ஏ),
(120412 ஏ). (120417 ஏ),
(120419 ஏ), (120419 பி),
(120420 ஏ), (120420 பி),
(120461 ஏ), (120461 பி),
(120471 ஏ), (120474 ஏ),
(120486 ஏ), (120486 பி),
120486 சி), (120488 ஏ),
(120493 ஏ), (120494 ஏ),
(120494 பி), (120543 ஏ).
(120551 ஏ), (120552 ஏ),
(120557 ஏ), (120557 பி),
(120557 சி), (120557 டி),
(120557 ஈ), (120569 ஏ),
(120570 ஏ), (120578 ஏ),
(120583 ஏ),
[120584ஏ], [120586ஏ],
[120591ஏ], [120599ஏ],
[120603ஏ], [120609ஏ],
[120610ஏ], [120632ஏ].
[120634ஏ], [120643ஏ],
[120643பி], [120643சி],
[120653ஏ], [120653பி],
[120653சி], [120653டி],
[120653ஈ]. [120653எவ்],
[120670ஏ], [120670பி],
[120688ஏ], [120690ஏ],
[120691பி], [120691ஏ),
[120692ஏ], [120692பி],
[120693ஏ[, [120693பி],
[120695ஏ], [120695பி),
[121279ஏ], [121279பி],
[121279சி). [121279டி],
[121594ஏ[,
[117664ஏ], [084233ஏ],
[102387ஏ], [102387பி],
[109362ஏ], [112656ஏ],
[113859ஏ], [113961ஏ],
[113961பி], [114184ஏ],
[116126ஏ], [116126பி],
[116126சி], [116172ஏ],
[116172பி].
(117810ஏ), (117900ஏ)
(117900பி), (117904ஏ)
(117914ஏ), (118037ஏ),
(118159ஏ), (118193ஏ),
(118198ஏ), (118208ஏ),
(118208பி), (118208சி),
(118208டி), (118208ஈ),
(118253ஏ), (119680ஏ).
(119693ஏ), (119694ஏ).
(119694பி), (119695ஏ),
(119699ஏ), (119718ஏ),
(120305ஏ), (120306ஏ),
(120308ஏ), (120308பி),
(120334ஏ), (120334பி),
(120353ஏ), (120414ஏ),
(120433ஏ), (120439ஏ),
(120457ஏ), (120457பி),
(120457சி), (120457டி),
(120458ஏ), (120458பி).
(120459ஏ), (120472ஏ),
(120545ஏ), (120580ஏ),
(120601ஏ), (120675ஏ),
(120801ஏ).

கரவெட்டி

[109943], [109946ஏ],
[110452ஏ], [115290ஏ!,
[101081ஏ], [111634ஏ],
[113423ஏ], [113533ஏ],
[113533பி], [115095ஏ],
[115095பி], [115095சி],
[115139ஏ], [115151ஏ],
[115151பி], [115151சி],
[115151டி], [115151ஈ],
[115161ஏ[, [115162ஏ],
[115178ஏ], [115180ஏ],
[115180பி], [115181ஏ],
[115183ஏ], [115219ஏ],
[115223ஏ], [115240ஏ],
[115257ஏ], [115273ஏ[,
[115285ஏ], [115285பி],
[115288ஏ].
(115290பி), (115290சி),
(115291ஏ), (115291பி),
(115311ஏ), (11312ஏ),
(115330ஏ), (115344ஏ),
(114344பி), (115344சி),
(115349ஏ), (115362ஏ),
(115362பி), (115415ஏ),
(115499ஏ), (118806ஏ),
[118818பி], [118932ஏ],
[118932பி], [118953ஏ],
[118953பி], [119024ஏ],
[119024பி], [119111ஏ],
[119893ஏ], [119939ஏ],
[119990ஏ], [119990பி],
[119998ஏ[, [120002ஏ],
[120002பி], [120014ஏ],
[120014பி], [120030ஏ],
[120050ஏ], [117356பி].
(118818ஏ). (தொடரும்)


## விற்பனைக்கு

ஒரு கிலோ சீனி இருபத்தெட்டு ரூபா (28. 00)
(வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு)

**நாதன் களஞ்சியம்**
213C, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம்.
T. P, FAX 2916 (69650)



## GTZ - Jaffna Rehabilitation Project
## கட்டடப்பொருள்கள் விநியோகம்

எமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் பாடசாலைகள், வீடுகள் புனர்நிர்மாண வேலைகளுக்கு தேவைப்படும் உள்ளூர் கட்டடப்பொருள்கள் (கண்டகல், சல்லி, மணல்) விநியோகம் செய்யக் கூடியவர்கள் உடனடியாகக் கீழ்க்காணும் முகவரியிலுள்ள எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கட்டடப்பொருள்கள் விநியோகம் தேவைப்படுகிறது.

பிரதான இணைப்பாளர்,
ஜிரிசற் – ஜேஆர்பி,
யாழ்ப்பாணம்.

இல. 11, கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 2238 (இ/9174)


## முதியோருக்கு மருத்துவப் பரிசோதனை

முதியோர் வாரத்தை ஒட்டி யாழ். பிரதேச செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட முதியோருக்கான இலவச மருத்துவப் பரிசோதனை நேற்று முன்தினம் குருநகர் அரசினர் வைத்தியசாலையில் டாக்டர் எஸ். திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

குருநகரைச் சேர்ந்த 55 வயதுக்கு மேற்பட்ட 120-க்கும் மேற்பட்ட முதியோருக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. சலப் பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ். பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன், நிர்வாகஉத்தியோகத்தர் ச. பேரானந்தன், சமூகசேவை உத்தியோகத்தர் க. வ. சிவநேசன், யாழ். மாநகரசபை உறுப்பினர் ம. எட்வேட், பொம்மை வெளிக்கான கிராமசேவை உத்தியோகத்தர் செல்வி ஜி. சகுந்தலா தேவி மற்றும் யாழ். பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், குருநகர் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-5)

## சர்வதேச...

(7 ஆம் பக்கத் தொடர்)

''பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் எமது போர் நடவடிக்கைகள் அமைவதில்லை. எமது இலக்குபொதுமக்கள் அல்லர். சில சமயங்களில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு விடும்'' என்றனர்.

### குடாநாட்டு மக்கள் பிரச்சினை

கேள்வி: குடாநாட்டு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஏதாவதுபேசினீர்களா?

பதில்: குடாநாட்டு மக்களின் பெரும் பிரச்சினையாக உள்ள போக்குவரத்துப் பிரச்சினை தொடர்பாகப் பேசினோம். குடாநாட்டுக்கு அருகேயுள்ள வன்னிக்கு வருவதற்கு எவ்வளவு தூரம் நாம் பயணம் செய்யவேண்டியுள்ளது. எனவே திருமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் கப்பல் சேவை நடக்க உதவ வேண்டும் என்று அவர்களிடம் கோரினோம்.

''திருகோணமலைக்கும், காங்கேசன் துறைக்கும் இடையில் கப்பல் சேவை நடத்துவது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, அகதிகளுக்கான ஐ. நா தூதரகம் ஆகியன எம்முடன் பேச்சுநடத்தின. அந்தஅமைப்புக்களின் வழித்துணையுடன் கப்பல் சேவையை நடத்த அனுமதி வழங்கி விட்டோம்'' என்று தமிழ்ச்செல்வன் பதில் அளித்தார்.

கேள்வி:- விடுதலைபுலிகளின் தலைவர்களுடன் நீங்கள் நடத்திய பேச்சுக்களின் பலாபலன் குறித்து அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டுவர ஜனாதிபதியைச் சந்திக்க முயற்சி மேற்கொள்ளவில்லையா?

பதில்;- சக ஆயர்கள் சகிதம் முன்பு ஒரு தடவை ஜனாதிபதியுடன் பேசியுள்ளேன். சமாதானத்துக்கான அவசியம் குறித்து எடுத்துக் கூறியுள்ளேன் அச்சமயம் பல உறுதி மொழிகளை அவர் வழங்கினார். அவை எதுவும் நடைமுறையில் வரவில்லை.

இந்தத் தடவை ஜனாதிபதி மற்றும் முக்கிய மானவர்களுக்கு புலிகளின் நிலைப்பாடு தொடர்பாக கடிதம் எழுதியுள்ளோம். அதுதொடர்பாக அரசே முடிவு செய்ய வேண்டும். ★

## இன்று

யாழ்ப்பாணம், ஒக். 5

விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் முகவர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று கமநலச்சேவைத் திணைக்களத்தில் இன்று காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது. [இ-ரி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டரங்கு

## ஐவா கிண்ண டெஸ்ட் போட்டி

# மழையால் நேற்றும் ஆட்டம் இல்லை;

# உலகசம்பியனை இலங்கை வென்றது

கொழும்பு, ஒக். 5

இலங்கை— ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் நடந்துமுடிந்த ஐவா கிண்ணத்திற்கபன டெஸ்ட் போட்டித் தொடரை இலங்கை அணி 1—0 என்ற கணக்கில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்தத் தொடரின் இறுதி ஆட்டத்தின் இறுதிநாளான நேற்றும் மழை காரணமாக ஆட்டம் நடைபெறாததால் இந்த 3 ஆவது டெஸ்ட் ஆட்டமும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

நேற்று நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதி வைபவத்தின் போது டெஸ்ட் தொடரின் வெற்றிக்கிண்ணத்தை இலங்கை அணித் தலைவர் சனத் ஜெயசூரிய பெற்றுக்கொண்டார் மேலும் இந்த டெஸ்ட் தொடரில் ஆட்டத் தொடர் நாயகனாக ஆஸ்திரேலிய அணியின் றிக்கிப் பொண்டிங் அறிவிக்கப்பட்டார்.

இவர் இந்தத் தொடரின் ஆரம்ப ஆட்டத்திலும் இறுதி ஆட்டத்திலும் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடியதுடன்இவரதுசுளத்தடுப்பு சகல ஆட்டங்களிலும் உயர்தரமாகவே காணப்பட்டது.

இவ்வருடம் நடந்துமுடிந்த உலகக் கிண்ணப் போட்டியில் வென்று உலக சம்பியனான ஆஸ்திரேலிய அணி அடுத்து நடைபெற்ற ஐவா கிண்ணத்துக்கான இரண்டு தொடரிலும் முன்னாள் உலக சம்பியனான இலங்கையிடம் தோல்விகண்டுள்ளது. மேலும் இலங்கை அணி நடந்து முடிந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் சந்தித்திருந்த படுதோல்விகளுக்குப் பரிகாரமாக அடுத்து நடைபெற்ற இரண்டு தொடரிலும் உலக சம்பியனைத் தோற்கடித்து கிண்ணங்களைத் தனதாக்கியுள்ளது.

(ஐ-ரி)

## விளையாட்டு விழா

மானிப்பாய், ஒக். 5

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் பட்டின முன்பள்ளி பாடசாலை விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் தமைமையில் பிரதேச சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராகக்கலந்துகொள்வார்.

(5-90)

## இன்றைய உதைபந்தாட்டம்

குருநகர், ஒக். 5

யாழ். கல்வி வலயப் பாடசாலைசளுக்கு இடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:—

### 16 வயதுப் பிரிவு

★ யாழ். இந்துக் கல்லூரி எதிர் அத்தியார் இந்துக் கல்லூரி (புத்தூர் வீனஸ் மைதானம்).

★ புனித ஜேம்ஸ் ம. வி. எதிர் புனித மரியாள் ம. வி. (துரையப்பா விளையாட்டரங்கு).

★ நாவாந்துறை றோ. க. வி. எதிர் கனகரத்தினம் ம. ம. வி. (துரையப்பா விளையாட்டரங்கு.)

### 18 வயதுப் பிரிவு

★ இடைக்காடு ம. வி. எதிர் செங்குந்த இந்துக் கல்லூரி (புத்தூர் வீனஸ் மைதானம்.)

★ புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு எதிர் உரும்பிராய் இந்துக் கல்லூரி (புத்தூர் வீனஸ் மைதானம்.)

★ கனகரத்தினம் ம. ம. வி. எதிர் புனித ஜேம்ஸ் ம. வி. (துரையப்பா விளையாட்டரங்கு.)

(ஐ-ரி)

★ ★ ★

வடமராட்சி, ஒக். 5

வடமராட்சி கல்விவலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்றைய ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

### 16 வயதுப் பிரிவு

★ உடுப்பிட்டி அ. மி. க. பாடசாலை எதிர் ஞானசாரியார் கல்லூரி (நெல்லியடி ம. ம. வி. மைதானம்)

★ கம்பர்மலை ம. வி. எதிர் இமையாணன் அ. த. க பாடசாலை (திக்கம் இ.வி.க. மைதானம்)

### 18 வயதுப் பிரிவு

★ திருஇருதயக் கல்லூரி எதிர் ஞானசாரியார் கல்லூரி (நெல்லியடி ம.ம.வி. மைதானம்)

★ கம்பர்மலை ம. வி. எதிர் இமையாணன் அ.த,க. பாடசாலை (திக்கம் இ.வி.க. மைதானம்)

(ஐ-ரி)

★ ★ ★

வடமராட்சி. ஒக். 5

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஈ-ஆர் போக்குவரத்துச் சேவை ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுபோட்டியில் திக்கமுனை மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ மாலை 4-00 மணி கொலின்ஸ்வி: க. எதிர் பருத்தித்துறை ஐக்கிய வி. க.

★ மாலை 5-00 மணி திக்கம் இளைஞர் வி. க. எதிர் தொண்டமனாறு ஒற்றுமை வி. க.

(ஐ-ரி)

## கிரிக்கெட் வீரரின் பெயர் விவரம் பதிவு

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இருந்து அண்மையில் தெரிவு செய்யப்பட்ட 15 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட் அணியின் 22 வீரர்களும் தமது முழுப்பெயரினையும் அடையாள அட்டை இலக்கங்களையும் யாழ். பாடசாலைகிரிக்கெட் சங்கத்தின் தலைவரும் யாழ்.மத்திய கல்லூரி அதிபருமான க. இராசதுரையிடம் இன்று நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளும்படி யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் கேட்டுள்ளது,

இந்த 22 வீரர்களில் இருந்தும் இறுதி 15பேர் அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

(ஐ-ரி)

## கரபந்தாட்டம்

அரியாலை, ஒக். 5

அரியாலை சன சமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி வி. எஸ். பி. குறூப் ஆதரவில் நடைபெற்று வரும் யாழ். மாவட்ட ரீதியான கரபந்தாட்ட (செற்-அப்) சுற்றுப்போட்டியில் இன்று அரியாலை சன சமூக நிலையத்தின் தற்காலிக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:—

★ மாலை 3.30 மணி— காங்கேசன்துறை ஐக்கிய வி. க. எதிர் தோப்பு இளைஞர் வி. க.

★ மாலை 4-30 மணி— விக்கினேஸ்வரா வி. க. எதிர் பாரதி விளையாட்டுக்கழகம்.

(ஐ-ரி)

# ஆசிரியர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 5

சன்மார்க்க மகா வித்தியாலய ஆசிரியர் தினவிழா நாளை காலை 10 மணிக்கு மாணவர் மன்றத் தலைவர் ந. அரிகரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவின் விசேட நிகழ்வாக மரநடுகை வைபவம் இடம்பெறும்.

(இ--க)

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக். 5

கொழுப்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் உலக ஆசிரிய தினவிழா நாளை காலை 9 மணிக்கு தேவாரமணி இ. பரராசசிங்கம் தலைமையில் நடைபெறும்.

சமூக ஜோதி கா. கணேசதாசன், பிரம்மஸ்ரீ தி. பாலசுப்பிரமணியக்குருக்கள் ஆகியோரது ஆசியுரையினைத் தொடர்ந்து மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். [க-30]

★ ★ ★

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் ஆசிரியர் தினவிழா நாளை காலை 9 மணிக்கு நடைபெறும்.

மாணவர்கள்,பெற்றோரின் ஏற்பாட்டில் நடைபெறும். இந்த விழாவில் அதிபர், ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். [க-30]

★ ★ ★

சண்டிலிப்பாய், ஒக். 5

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆசிரியர் தினம் நாளை கொண்டாடபபடவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் மாணவர்களின் கவிதை, பேச்சு மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(க-135)

★ ★ ★

கைதடி, ஒக். 5

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஆசிரியர் தினம் நாளை கொண்டாடப்படவுள்ளது.

முன்னாள் அதிபர் க. நடராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில்மேற்படி வித்தியாலயத்தில் கடந்த 45 வருடங்கள் கல்வி போதித்த ஆசிரியர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(க-74)

கோப்பாய், ஒக் 5

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி ஆசிரியர் தின விழா நாளை காலை 9 மணிக்கு கல்லூரியின் கலையரங்கில் வைத்திய கலாநிதி வை. தியாகராசா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேசசபை உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சி. ரவீந்திர சர்மாவும், சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய ஆசிரியர் பொ. கந்தையாவும், கௌரவ விருந்தினராக இளைப்பாறிய ஆசிரியர் செல்வி ந.பாக்கியமும் கலந்துகொள்வர். [க.72]

★ ★ ★

சண்டிலிப்பாய், ஒக். 5

சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டமும் சண்டிலிப்பாய்க் கோட்ட அதிபர்கள் சங்கமும் இணைந்து நடத்தும் ஆசிரியர் தின விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

ஆசிரியர்களிடையே கவிதைப்போட்டி, ஓவியப் போட்டி, புளுகுப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்ற பல்வேறு போட்டிகள் இந்த விழாவில் இடம்பெறவுள்ளன.

இந்தக் கோட்டப் பிரிவில் 25 வருடகாலம் சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் இந்த விழாவில் வைத்து பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (க-135)

★ ★ ★

அளவெட்டி, ஒக். 5

வலிகாமம் கல்வி வலய தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தினர் நடத்தும் ஆசிரியர் தினவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மருதனார்மடம் யூனியன் கல்லூரியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பிரிவிலுள்ள ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும், ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட கலை, கலாசார விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும்.

[ஐ-13]


## வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் பழைய மாணவரும்
முன்னாள் ஆசிரியரும் அதிபருமாகிய

### திரு. ந. பரமசிவம் அவர்கள்

ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்வதையிட்டு ஆசிரியர்கள், சிற்றூழியர்கள், மாணவர்கள் ஆகிய நாம் பெருமகிழ்வுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அவரின் தன்னலமற்ற சேவை தீவக கல்விச் சமூகத்திற்குப் பரந்துபட்டுச் செழித்து வளர பல்லாண்டுகள் சேவை புரிய உளமார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், சிற்றூழியர்கள், மாணவர்கள்.
யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்.

(69660)



## JAFFNA SCIENCE ASSOCIATION

### Call for Abstracts of Communications

The Jaffna Science Association invites members to Submit Abstracts of Communications to be considered for presentation at the annual sessions scheduled in April 2000.

A member should submit the following:

a) An abstract
b) A Summary (extended abstract)
c) Authors' declaration

All the above documents should be sent to the General Secretary on or before 30th November, 1999,

Guidelines for submission is being sent to the members of J.S,A.

General Secretary

(69664)



## ST.JOHN'S COLLEGE
JAFFNA

### அனைத்துலக ஆசிரியர் தினம் 1999

பரி. யோவான் கல்லூரி மாணவர்களும், பழைய மாணவர்களும் இணைந்து கொண்டாடும் அனைத்துலக ஆசிரியர் தினம் 06—10—99 புதன்கிழமை பகல் 10.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பெற்றோர், பழைய மாணவர்கள், மாணவர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

கல்லூரி மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்.

(சி/9175)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த மாதம் காணாமற்போன ஏழுபேர் குறித்து தகவல் இல்லை

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ். மாவட்டத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் மட்டும் காணாமற் போயுள்ளவர்கள் தொடர்பாக 16 முறைப்பாடுகள் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

காணாமற்போனவர்களில் ஒன்பது பேர் கண்டு பிடிக்கப் பட்டுள்ளனர். 7 பேர் தொடர்ந்தும் தேடப்பட்டு வருகிறார்கள் என்றும் இவர்கள் குறித்து இராணுவ முகாம்களுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் எந்த முகாமிலும் தடுத்து வைக்கப்படவில்லை என்று படையினர் தெரிவித்துள்ளதாகவும் குழுவின் மாவட்ட இணைப்பதிகாரி எஸ். சிறீதரன் தெரிவித்தார்.

இந்த மாதத்தில் படையினரால் கைது செய்யப்பட்ட 16 பேரில் 11 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் மூவர் இராணுவ முகாம்களிலும் இருவர் காங்கேசன்துறை தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-5)

## விடுதலை...

[முதலாம் பக்கத் தொடர்]

அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பதாக அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

உடனடியாகத் தனது விடுதலைக்கு உத்தரவிட வேண்டும் என்றும்—

தனக்கு நஷ்டஈடாக 20 லட்சம் ரூபா வழங்கப்படவேண்டும் என்றும்—

அவர் கேட்டிருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலீஸ்மா அதிபர் ஆகியோரை அவர் தனது மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டிருக்கிறார். (ஐ-7-21)

## பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து பேசாலையில் பதற்றம் நிலவியது. நேற்று நண்பகல் வரை கடைகள் திறக்கப்படவில்லை. [ஐ-3-6-7]

## லங்கா முடித்த.,

[முதலாம் பக்கத் தொடர்]

சொந்த இடங்களுக்குச் சென்றிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 88 பேரும் கண்ணாடித் தொழிற்சாலை அகதிமுகாமில் தங்கியிருந்த 340 அகதிகளும் இந்தக் கப்பலில் யாழ்ப்பாணத்துக்கு பயணம் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

எமது ஓடியோ CD வெளியீடு!

- மானசீகக் காதல்
- நானும் காதலிக்கின்றேன்
- ஊட்டி
- காமெடியர் தினம் (REMIX)
- தடையப்பா (REMIX)

★ புதிய ஓடியோ CD க்கள் விற்பனைக்கு உண்டு.

வீடியோ எக்கணமி மியூசிக் கோணர்

பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி.

(69678)

எமது இன்றைய வீடியோ CD வெளியீடு!

பாண்டியராஜனின்

மனைவிக்கு மரியாதை

ஆர்க் வீடியோ லைபிறறி

அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/9191)

## விதவைப்...

(முதலாம் பக்கத் தொடர்)]

நிற்க வைத்துவிட்டு தன்னை நள்ளிரவில் அருகில் உள்ள தென்னந் தோட்டத்துக்குள் பலவந்தமாகக் கூட்டிச் சென்று பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாக அந்தப் பெண் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து கணுக்காய் படை முகாமில் முறையிடப்பட்டதை அடுத்து அவர்கள் பொலீஸாருடன் வந்து சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் இடத்தைப் பார்வையிட்டு மேல் விவரங்களைத் திரட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துக்கும் இராணுவத்தினருக்கும் தொடர்பு ஏதுமில்லை என்றும்—

பொலீஸ் விசாரணைகள் அதை உறுதிப்படுத்துவதாகவும்—

சம்பந்தப்பட்ட பிரிவு இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால் கொடிகாமம் பொலீஸ் பிரிவு இச் சம்பவம் குறித்து தகவல் ஏதும் வெளியிட மறுத்துவிட்டது. (உ-117)

## டாங்கியை...

(முதலாம் பக்கத் தொடர்)

வதற்காகவே ஏவுகணையின் எச்சங்கள் வெளிநாட்டில் பரிசோதனை செய்யப்பட உள்ளன.

பரிசோதனை அறிக்கை கிடைத்ததும் புலிகளின் கைகளில் உள்ள ஏவுகணையின் ரகம் உட்பட பல தகவல்கள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-உ)

## நுவரெலியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ளப்பட்ட மிகப்பெரிய தேடுதல் நடவடிக்கை இது என்று செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

நுவரெலியா உட்பட மத்திய மலைநாட்டின் பல பகுதிகளிலும் விடுதலைப்புலிகளின் ஊடுருவல்கள், செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக வெளியாகிவரும் தகவல்களைத் தொடர்ந்தே பெரும் எடுப்பிலான இந்தத் தேடுதல் நடவடிக்கையை பொலீஸார் மேற்கொண்டனர்.

கொழும்பு—பதுளை ரயில் பாதையில் நானுஓயாவுக்கு சமீபமாகக் கடந்த சனிக்கிழமை குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

## பட்டதாரிகள் தினம்

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ். பல்கலைக்கழக பட்டதாரிகள் தினம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் தொடர்பகத்தில் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்தவர்களுக்குப் பட்டதாரிகள் தினம் தொடர்பான நிகழ்ச்சி நிரல் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்—

பழைய மாணவர் தொடர்பகத்தில் பதிவினை மேற்கொள்ளாதவர்களும் பட்டதாரிகள் தினத்தை ஒட்டிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம் என்றும் —

பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7)

## வீட்டில் இருந்த வேளை

# பிரதேச சபை செயலாளர் தாக்கப்பட்டு படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக். 5

இரவு வேளை வீட்டு முற்றத்தில் இருந்து கதைத்துக் கொண்டிருந்தவர் இனந் தெரியாத சிலரின் தாக்குதலுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருக்கிறார்.

சாவகச்சேரி பெரிய அரசடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளரான வே. அருணந்தி (வயது 50) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

திடீரென வீட்டுக்குள் பிரவேசித்த மூன்று இளைஞர்கள் பொல்லுகள் மரச் சலாகைகள் கொண்டு இவரை கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்திபதாகக் கூறப்படுகிறது.

தாக்குதல் நடத்திய மூவரில் ஒருவரை சாவகச்சேரி பொலீஸார் கைது செய்துள்ளனர். சம்பவம் நடந்த சமயம் அங்கிருந்த சிலர் இவரை மடக்கிப் பிடித்து பொலீஸில் ஒப்படைத்ததாகக் கூறப்பட்டது. ஏனைய இருவரும் தப்பிச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பலத்த காயமடைந்த பிரதேச சபைச் செயலாளர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டார். (ஐ-ஓ1-5)

## மட்டக்களப்பில் பெண் கைது

கொழும்பு குற்றத்தடுப்பு தலைமையகத்திலிருந்து இரண்டு மாதங்களின் முன் தப்பிச் சென்றதாகக் கூறப்படும் 43 வயதுப் பெண் ஒருவர் மட்டக்களப்பில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு வாசியான கதிர்காமத்தம்பி உதயகுமாரி என்பவரே கைது செய்யப்பட்டார்.

நபர் ஒருவர் கொடுத்த தகவலை அடுத்து மட்டக்களப்பு கோட்டை முனைப்பாலம் பொலீஸ் சோதனைச் சாவடியில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிவான் கே. தட்சணாமூர்த்தி முன்னிலையில் இவர் ஆஜர் செய்யப்பட்டபோது எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு அவர் உத்தரவிட்டார். (ஐ-ரி-21)

## மாணவி...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டிருந்த ஓட்டுமடத்தைச் சேர்ந்த நடராசா உமாரஞ்சினி என்ற மாணவி நேற்று வீடு திரும்பிவிட்டதாக அவரது பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

தாயாருடன் முரண்பட்டுக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிய இந்த மாணவி தனது மாமா வீட்டில் தங்கியிருந்துவிட்டு நேற்று வீடு திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

)தேவேளை—

கடந்த 30 ஆம் திகதி தொடக்கம் தாவடியிலிருந்து காணாமற்போனதாகத் தெரிவிக்கப்பட்ட மார்க்கண்டு விபுலானந்தன் என்பவர் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்.

இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான மின் கம்பிகளைத் திருடியதாக குற்றஞ் சாட்டப்பட்ட இவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா 1999

மாணவர்களுக்கான புகைப்பட சேவை (கறுப்பு வெள்ளை, கலர்) கலைப்பீட பொது அறையில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.
(படங்கள் 3 நாள்களுக்குள் பெற்றுக்கொள்ளலாம்.)

மாணவர் ஒன்றியம்

யாழ். பல்கலைக் கழகம். (6967 7)

கவரிடுதல் - LAMINATION

முதன் முதலாக யாழ். நகரில்

மிகப் பெரிய அளவுகளிலான வரைபடங்கள், பட்டதாரிச் சான்றிதழ்கள், உறுதிகள், கார் காப்புறுதிகள் மற்றும் பல ஆவணங்கள் எவையாயினும் குறைந்த செலவில் கவரிட்டுப் (LAMINATION) பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சன்லைற் றைக்கிளீனேர்ஸ்

பஸ் நிலையம் - யாழ்ப்பாணம்.

கிளைகள்:-
சன்லைற் மல்ரி சேவீஸ்
சன்லைற் கொமினிக்கேசன் ] கச்சேரியடி

T. P. No. 2741

(69656)

## சுங்காவில்...

[முதலாம் பக்கத் தொடர்]

பாணிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 2 பொதுமக்கள் உயிரிழந்ததாகவும் —

தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தாக்குதலை நடத்தி விட்டுத் திரும்பிய ஆயுதபாணிகள் சுங்காவில்—பங்குராணைச்சந்தியில் உள்ள பொலீஸ் காவல் நிலையம் மீதும் தாக்குதல் நடத்தினர் எனவும் —

பொலீஸார் பதில் தாக்குதலை மேற்கொண்டு தாக்குதலை முறியடித்துவிட்டனர் எனவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. [ஐ-7]

## படை...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த 15 ஆம் திகதி மகாஜனாக் கல்லூரி இயங்கத் தொடங்கியதும் அங்கு செல்லும் மாணவர்சள், ஆசிரியர்களின் அடையாள] அட்டைகள் இப்பகுதியில் அமைந்திருந்த சோதனை நிலையத்தில் வைத்துப் பெறப்பட்டு வந்தன.

சோதனைகளும் இடம்பெற்றன.

தற்போது இந்த இடத்தில் இருந்து படையினர் வெளியேறியதை அடுத்து மாணவர்கள், ஆசிரியர்கள் எவ்வித தடையும் இன்றி பாடசாலை சென்றதை நேற்றுஅவதானிக்கக் கூடியதாக இருந்தது. (ஐ-13)

ஒக்ரோபர் — 10 உலக உளநல நாள்

முதுமை என்பதோர் அழகினைப் போற்றுவோம்

முதுமை:

முற்றோய்வின் காலமல்ல. ஒய்வோடு முடங்கிக் கிடக்காது இயங்கித்திரிதல் அவசியம். உடல், உள, சமூக ஆன்மீக ஒன்றிணைப்புக்கும் ஒத்திசைவுக்கும் சரியான இயக்கப்பாடு அவசியம். சோம்பல் சுகம் தராது.

இயலுமான வேலைகளில் அவர்தமை ஈடுபடுத்துவோம்.

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்

அகவொளி உளநலச் சங்கம் சுகவாழ்வு சாந்திகம்

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-10-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org